# நந்து செல்லம்

## 1

அன்றைய தினம் பொலபொலவென விடியாமல் நிதானமாகவே விடிந்தது போல் நந்தினிக்குத் தோன்றியது. எழுந்து கைகளை பரபரவென தேய்த்து கண்களில் ஒற்றி 'முருகா சரணம்' சொல்லியவள் ஜன்னலுக்கு வெளியே வீட்டின் சிறிய தோட்டத்தைப் பார்த்தாள்.

சிறுசிறு மலர்ச் செடிகள், கீச்சுக் குரலில் அலகுகளை கொத்தி விளையாடும் சிட்டுக் குருவிகளின் அழகு எல்லாம் கண்குளிர தெரிந்தது.

அழகிய விழிகளை அகல விரித்து ரசித்தவள் மணியைப் பார்த்தாள். ஆறு மணி. இன்று புதியதாய் ஒரு கம்பெனிக்கு இன்டர்வியூவிற்கு செல்ல வேண்டும் என்பது உரைத்தது.



ஆயினும், இன்டர்வியூ என்ற போதும் அவள் எவ்விதப் பதட்டமும் காட்டவில்லை. நிதானமாகவே எல்லா வேலைகளையும் முடித்துவிட்டுக் கிளம்பியபோது மணி எட்டு.

எதிரே வந்து புன்னகைத்த அன்புத் தாயிடம் பெரிதாய் பற்களைக் காட்டி முறுவலித்தவள், அப்படியே அவள் கழுத்தைக் கட்டிக் கொண்டு கொஞ்சவும் செய்தாள்.

''அம்மா, இன்று டிபன் பிரமாதம். உங்கள் கைவண்ணமே தனி...'' என்றபடி செல்லத்தாயின் முகத்தோடு முகம் வைத்து ஆடினாள்.

தாய் பூர்ணியோ சங்கோஜப்பட்டவளாய், ''ஐயோ.. விடு.. கண்ணு.. உன் புது டிரஸ்ஸில் கறை எதுவும் பட்டு விடப் போகிறது...'' என பயந்தாள்.

''அதெல்லாம் படாது...'' என்றபடி மேலும் இறுக்கிப் பிடித்து தாயை விடுவித்தவள், ''அம்மா ஒரு முக்கியமான விஷயம்...'' என்றாள்.

''என்ன கண்ணு?''

''இன்று புதிதாய் இன்னொரு வேலைக்கான இன்டர்வியூவை அட்டெண்ட் செய்யப் போகிறேன். அதில் செலக்ட் ஆகி விட்டால் இந்த கூட்டல் கழித்தல் குமாஸ்தா வேலைக்கு டாட்டா காட்டி விட்டு அங்கு சென்று விடுவேன். உங்களுக்குச் சம்மதம்தானே?''

பெரிய. விஷயம் ஒன்றை வெகு சாதாரணமாய் மகள் சொன்னாலும் பூரணி அதிரவில்லை. ''எல்லாம் உனக்குத் தெரியாதா கண்ணு...?'' என்றவள்,

''அப்பாவிடம் சொல்லி விட்டாயா?'' என்றாள் ஞாபகம் கொண்டவளாய்.

''நேற்றே டாடியிடம் சொல்லி விட்டேன். இன்று காலை ஷிப்ட்டுக்கு கிளம்பும்போது ஆல் த பெஸ்ட் சொல்லி வாழ்த்தி விட்டுத்தான் சென்றாரம்மா...''

நந்தினி சிரிப்பு மாறாமல் சொல்ல ''பிறகென்ன... கிளம்பு.. கண்ணு..!'' என அவளும் தன் பங்குக்கு தாடையை கொஞ்சி மகளுக்கு விடை கொடுத்தாள் பூரணி.

நந்தினி சாலையில் இறங்கி ஸ்கூட்டியை விரட்டினாள். மணியைப் பார்த்தாள். எட்டு. அலுவலகத்திற்கு இரண்டு மணி நேர பர்மிஷன் போட்டாயிற்று. எப்படியும் பத்து மணிக்குள் இன்டர்வியூவை முடித்துவிட்டு அலுவலகம் சென்று விடலாம் என எண்ணினாள்.

அவள் வேலை தேடிச் செல்வது 'எம்.எம்.எக்ஸ் போர்ட்ஸ்' எனப்படும் நகரின் பெரிய மென்பொருள் தயாரிப்பு கம்பெனி. வணிக வளாகம் ஒன்றின் மையப் பகுதியில் அமைந்திருந்தது.

அட்ரஸ்ஸை சரி பார்த்து, மார்பிள் பளபளப்பில் நவீன டிசைனிங் வேலைப்பாடுகளுடன் பிரமிக்க வைக்கும் அலங்கார முகப்புடன் இருந்த எம்.எம்.எக்ஸ்போர்ட்ஸில் நுழைந்தாள்.

படபடவென படிகளில் குதி நடையுடன் ஏறியவள் அதே விரைசலுடன் நடந்து ரிசப்ஷனை நெருங்கினாள்.

ரிசப்ஷன் பெண் ரெடிமேடாய் புன்னகைத்து வழி காட்டினாள். லிப்ட் வழியாக முதல் ப்ளோரை அடைந்து நடந்தாள். வரிசையான பாலிமர் இருக்கைகளுடன் இன்டர் வியூ ஹால் தெரிந்தது.

'ஒன்லி லேடீஸ்' என விளம்பரத்தில் இருந்ததால் அவளைப் போலவே ஐந்தாறு பெண்கள். கையில் சர்டிபி



கேட்டுகளுடன் பவ்யமாய் பயபக்தியோடு. நந்தினி மெல்லிய புன்னகை படர இருக்கையொன்றில் போய் அமர்ந்த போது எல்லோரும் நிமிர்ந்து அவளை ஒரு பார்வை பார்த்தனர்.

திரும்பிக் கொண்டனர்.

ஒரு சிறு புன்னகை கூட இவர்களுக்கு வராதா.. என ஏக்கமாய் நினைத்த நந்தினி எல்லோரையும் உற்றுக் கவனித்தாள்.

ஐந்தில் மூன்று பேர் அலங்காரத் தேர் போல் அழகுப் பதுமைகளாய் உட்கார்ந்திருந்தனர். அதிலும் நந்தினி பக்கத்தில் அமர்ந்திருந்தவள் ஒரு வண்டி மேக்கப் சமாச்சாரங்களை முகத்தில் உடம்பில் அடித்து இம்மி அசையாமல் உட்கார்ந்து 'பார்பி Dollஐ' நினைவு படுத்தினாள்.

நடக்கப் போவது செகரட்டரி தேர்வா இல்லை அழகிப் போட்டியா?

நந்தினி வியந்தவள் பார்வையை நேராக்கியபோது முன் மேஜையொன்றில் சிறுசிறு பாம்ப்லெட் கார்டுகள் கிடப்பது தெரிந்தது.

கம்பெனி பற்றிய குறிப்புகள் அடங்கிய கார்டு அது. அதில் எம்.எம்.எக்ஸ்போர்ட்ஸின் தயாரிப்பு விவரங்கள், கோடிகளில் நடக்கும் விற்பனை விவரங்கள், கம்பெனியின் சாதனைகள் என எல்லாமே விரிவாய் விளக்கமாய் தரப்பட்டிருந்தது.

கீழே, 'மோகன மகேந்திரன், மேனேஜிங் டைரக்டர்..' என பெரிய எழுத்துக்களில் அச்சிடப்பட்டிருக்க.. சரியான சுய தம்பட்டக்காரனாய் இருப்பானோ? என நந்தினிக்கு சிந்தனை ஓடியது.

கூடவே மணியைப் பார்த்தவள் இன்டர்வியூ ஆரம்பித்து விட்டதா.. இன்னும் அசையாப் பதுமைகளாய் இருக்கிறார்களே.. என்று எண்ணத் தோன்ற பக்கத்து பார்பி டாலிடம் பேச்சுக் கொடுத்தாள்.

ஆனால் பார்பி டாலோ அவள் கேட்டதற்கு ஓரிரு வார்த்தைகளில் சுருக்கமாய் பதில் சொல்லியபடி மெல்ல அவள் தோள்களில் இடித்தது.

நந்தினி பார்த்ததும் பார்வையாலே மேல் நோக்கி சைகை காட்டியது.

திடுக்கிடலுடன் நிமிர்ந்து பார்த்த நந்தினி மேலும் வியப்பானாள்.

மேலே.. சிறிய குமிழ் காமிரா ஒன்று மெல்ல சுழன்று கொண்டிருந்தது.

அவளுக்கு புரிந்து விட்டது.

வெளியே அவர்கள் இருப்பதை நடப்பதையெல்லாம் உள்ளிருந்து எம்.டி. அதாவது அந்த மோகன மகேந்திரன் பார்த்து ரசித்துக் கொண்டிருக்கக் கூடும்.

அதனாலே.. இந்த பதுமைகள் எல்லாம் பேசா மடந்தைகளாய்.. பவ்யமாய்.. பய பக்தியோடு... வாலைச் சுருட்டிக் கொண்டு இருக்கிறார்களோ?

நந்தினிக்கு நினைத்தபோது சிரிப்புதான் வந்தது.

இந்த பசப்புக்கெல்லாம் அவள் பயப்படுவதாவது..?

'சரியான பனங்காட்டு நரிடி.. நீ! எல்லாமே உனக்கு அலட்சியம்தான். தலையில் இடி விழுந்தால்கூட கல்லுளி மங்கினியாய் இருப்பாய்..' தோழி நீரஜா ஒரு முறை மெயின் ஹவரில் அவள் மிஸ்ஸை பொருட்படுத்தாது ஆங்கில நாவல் ஒன்றை அக்கறையாய் படித்துக் கொண்டிருந்தபோது சொன்ன கமெண்ட் இது.



அந்த கல்லூரி நாட்களில் துணிச்சலுக்கு பெயர் பெற்றவள் இந்த இன்டர்வியூக்களை கண்டு மிரள்வதாவது..?

அவள் யோசனையைக் கலைத்தவாறு பணியாள் ரூமிலிருந்து வெளிவந்து சைகை செய்தான்.

பார்பி டால் பயபக்தியாய் எழுந்து அன்ன நடை போட்டு இன்டர்வியூ அறை நோக்கிச் சென்றது.

மற்ற இரு பெண்களும் குனிந்து ஜெனரல் நாலேட்ஜுக்காக புத்தகம் ஒன்றை புரட்டிக் கொண்டிருக்க.. நந்தினி துப்பட்டாவை மடித்து விட்டவாறு கால் மேல் கால் போட்டுக் கொண்டாள்.

போலி மரியாதைகளை விட தைரியமும் தன்னம்பிக்கையும் அவசியம் என்பது அவள் பாலிசி.

மேலும் பத்து நிமிடங்கள் மௌனமாக நகர்ந்தது.

அடுத்து அவள் முறை என்று வந்ததும் அவள் தயங்கவில்லை.

எழுந்து விடுவிடுவென நடந்து இன்டர்வியூ அறைக்குள் நுழைந்தாள்.

அந்தப் பெரிய ஏஸி ஹாலின் பளபளப்பான மேஜையின் மறுபுறம் குஷன் சீட்டில் அவன்!

நடுத்தர வயசுக்காரனை எதிர்பார்த்தவளுக்கு நெடு நெடு உயரத்துடன் திடகாத்திரமான ஒரு இளைஞன் உட்கார்ந்திருந்தது வெகுவாய் ஆச்சரியப்படுத்தியது.

அவளை நிமிர்ந்து பார்க்காமலே, ''உட்கார்..'' என கர்ஜனைக் குரலில் அவன் சொன்னபோது ஒருமையில் அவன் விளிப்பது கண்டு அதிரத்தான் செய்தாள்.

இருந்தும் முகமலர்ச்சியாய் பவ்யம் காட்டி வணக்கம் சொன்னாள்.

அவள் வணக்கம் சொன்ன விதத்தை கண் கொட்டாமல் பார்த்தான்.

உர்ரென சீரியஸாய் வைத்திருந்த முகத்தின் இறுக்கத்தை தளர்த்திய அவனது உதடுகள் மெல்ல சிரித்தது.

அட.. புலி சிரிக்கிறதே.. என எண்ணியபடி அவனையே உற்றுப் பார்த்தாள்.

சுருளான முடி தவழும் பரந்த நெற்றி, முறுக்கி விடப்பட்டிருக்கும் அடர் மீசை, மின்னலாய் பாயும் கரு விழிகள், ஆஜானுபாகுவான உடற்பயிற்சி உடம்பு, ஒருவித வசீகரத்தன்மையுடன் மற்ற ஆண்களிடமிருந்து மாறுபட்டிருந்த அவனது சுபாவம் நந்தினியை கவனிக்க வைத்தது.

சீட்டில் உட்கார்ந்தவள் அவன் கேட்பதற்கு காத்திராமல் பைலை நீட்டினாள்.

அவளைப் பார்த்த பார்வையை விலக்காமல் வாங்கியவன் படபடவென பைலை புரட்டினான். திருப்பிக் கொடுத்தான்.

அவன் கேட்ட முதல் கேள்வி அவளைத் தூக்கி வாரிப் போட்டது.

''என் பெயர் தெரியுமா? சொல்..!'' என்றான். நந்தினி வியந்தாள்.

அவள் சந்தேகப்பட்டது போல் சரியான சுய தம்பட்டக்காரனாய் இருப்பானோ? என விழிகளை அகல விரித்து அவன் முகக் குறிப்பை பிடிக்க முயன்றாள்.



''சுய தம்பட்டத்திற்காக கேட்கவில்லை. வெளியே கம்பெனி பாம்ப்லெட்டில் என் பெயர் போட்டிருந்தது. நீ கூட எடுத்துப் பார்த்தாயே.. உன் ஞாபக சக்திக்காக இந்தக் கேள்வி.''

அவனது தெளிவான குரல் விளக்கம் கொடுத்ததும், 'அட இதப் பார்றா..' என கேலியாய் நினைத்தவள் வந்த சிரிப்பை அடக்கிக் கொண்டாள்.

ஞாபகப்படுத்த் வேண்டிய அவசியமே இல்லாமல் அவள் உதடுகள் அசைந்தது. ''மோகன.. மகேந்திரன்...'' என்றது.

''வெரிகுட்! யூ.. ஆர்.. க்யூட்..!'' என்னவோ உலகின் ஒன்பதாவது அதிசயத்தை அவள் கண்டு பிடித்துச் சொல்லி விட்டது போல் பாராட்டினான்.

அடுத்து, 'எனக்கு என்ன வயது.. சொல்லு...' என கேட்டுத் தொலைப்பானோ... என்று அவள் நினைக்கையிலே அவன் நன்றாய் அவளை உற்றுப் பார்த்து விட்டு, ''உன் வயதுக்கு மிகுந்த அழகாய்த்தான் தெரிகிறாய்...'' என்றான்.

இது போன்ற புகழ்ச்சியில் என் தலை ஒன்றும் கிறுகிறுத்து விடாது என்பது போல் எவ்வித சலனமுமில்லாமலே அவனைப் பார்த்தாள்.

''என்ன பேசாமல் இருக்கிறாய்? நான் சொன்ன அழகு விஷயத்தை ஆமோதிக்கிறாயா இல்லை மறுக்கிறாயா?''

அவன் வேண்டுமென்றே சீண்டுவது போல் கேட்டதும் நிமிர்ந்து கண்களை முறைப்பது போல் சுருக்கினாள்.

''செகரட்டரிக்கான இன்டர்வியூ தேர்வில் இது போன்ற கேள்விகள் அவசியம்தானா என்பதை கனம் எம்.டி. அவர்கள் யோசிக்க வேண்டும்..''

- கேலியான அவளது பதிலின் அர்த்தம் உணர்ந்து பெரிதாய் சிரித்தான்.

''உனது பதில் சரிதான். ஆனால் நான் அழகு பற்றி பேசியதற்கு முக்கிய காரணமிருக்கிறது.''

'என்ன காரணம்?' என கேட்கக் கூடாது என்பது போல் அவள் இறுக்கமான உதட்டுடன் இருக்க அவனே தொடர்ந்தான்.

''எம்.டி. என்ற முறையில் நிறைய மீட்டிங்குகள், பார்ட்டிகள், செமினார்கள் என அட்டெண்ட் செய்ய வேண்டியிருக்கும். அது போன்ற சமயங்களில் என்னுடன் செகரெட்டரியாக வரும்போது அழகு விஷயத்தில் சில பொருத்தங்கள் இருக்க வேண்டுமல்லவா?''

'சரிதான்.. இதில் மன்மத கொக்கு நினைப்பு வேறா..?' என புருவம் உயர்த்தியவள் கம்பீரமான அவனது அதிகார ஆளுமையைக் கண்டு அசரத்தான் செய்தாள்.

அவன் தொடர்ந்தான்.

அவனது கம்பெனி பற்றி, குறுகிய காலத்தில் எக்ஸ்போர்ட்டில் அதிக மென் பொருள்கள் ஏற்றுமதி செய்து முதல் தரமான இடத்தில் இருப்பது பற்றியெல்லாம் விளக்கினான். எல்லாவற்றுக்கும் பின்னணி தனது அசுரத்தனமான உழைப்பு, தனது அபாரமான மூளை என தொனிக்கும் வகையில் அவன் தொடர்ந்து பேசியது அவளை சிறிது சலிப்படையச் செய்தது.

கையில் தண்டோரா வைத்துக் கொண்டு அடிக்காத குறைதான்! இப்படியொரு தம்பட்டக்காரனை முதல் முறையாய் இப்போது தான் தான் சந்திக்கிறோமோ? என்ற நினைப்பு அவளுள் ஓடியது.



அவன் பேசிக் கொண்டிருந்தவன் சட்டென நிறுத்தினான்.

''இப்படி என்னைப் பற்றி விரிவாய்ச் சொல்கிறானே.. எதற்கு என்று தெரியுமா?''

''அதையும் நீங்களே சொல்லி விட்டால்.. கொஞ்சம் நன்றாக இருக்கும்.''

அவள் கேலியைப் பொருட் படுத்தாமல் சீரியஸான முகத்துடன் ஸீட்டை விட்டு எழுந்து முன் வந்தான். கைகளை குறுக்காய் கட்டியபடி அவளைப் பார்த்தான்.

பார்வை.. என்றால் நிதானமாய் மேலிருந்து கீழ் வரை அவளை ஊடுருவும் பார்வை.

அவளும் அசரவில்லை. தனது அழகிய விழிகளை சற்று அகல விரித்து அவனையே பார்த்தாள்.

பிடறியை உலுக்கிக் கொண்டு நிற்கும் சிங்கம் போல் கம்பீரமாய் உறுத்துக் கொண்டு அவன் நின்றது அவளைக் கவரத்தான் செய்தது.

அவளை மேலும் சிந்திக்க விடாமல் இரு கைகளையும் தட்டுவது போல் பாவனை செய்தவன், ''முக்கியமான கேள்வி ஒன்றை இனிதான் உன்னிடம் கேட்கப் போகிறேன்'' என்றான் பீடிகை பொங்க.

அவள் ஒன்றும் பேசாது தலை சாய்த்து அவனையே பார்த்தாள்.

''நான் கேட்கும் இந்தக் கேள்வி உன் வாழ்க்கையை.. ஏன்.. உன் தலை விதியையே தீர்மானிக்கப் போகிறது. அதனால் யோசித்து கவனமாய் நீ பதில் சொல். சொல்ல வேண்டும். புரிகிறதா?''

விஷயத்தைச் சொல்லாமல் ரப்பராய் அவன் இழுக்கிறானே என்ற சினத்தில் வேண்டுமென்றே அவள் தலையை பூம்பூம் மாடு போல் மேலும் கீழும் ஆட்டினாள், அவனை எரிச்சல் படுத்துவது போல் செய்தாள்.

ஆனால் அவனோ அந்தக் கேள்வி மூலம் நிஜமாகவே அவளை எண்ணெய்க் கடலில் தள்ளி பற்றி எரியச் செய்தான்.

தூக்கி வாரிப் போட்டது நந்தினிக்கு.

''நான் உன்னை மணந்து கொள்ள விரும்புகிறேன், சம்மதிக்கிறாயா?'' என்று கேட்டிருந்தான் மகேந்திரன்.

## 2

அவன் அப்படி ஒரு கேள்வியைக் கேட்டான்.

அவள் அதிரவில்லை.

கலகலவென முத்துப் பற்கள் தெரிய சிரித்து விட்டாள்.

''நல்ல ஜோக் ஸார் இது!''

அவள் சொல்ல அவனது முகம் படு சீரியஸான்து.

''நான் சொல்வது ஜோக் இல்லை. உண்மை. நிஜமாய் கேட்கிறேன்...''

அவள் ஒரு கணம் சிரிப்பை நிறுத்தி அவனையே உறுத்துப் பார்த்தாள்.

அவன் கண்களில் ஆவலும் ஆர்வமும் மின்ன அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.



பாவி, நிஜமாய்த்தான் கேட்டிருக்கிறான். வேலைக்கு வந்தவளிடம் கட்டிக் கொள்கிறாயா? என்று கேட்கிறான். என்ன திமிர்.. என்ன தைரியம் இவனுக்கு?

கோபத்துடன் நினைக்கையிலே அவளுக்கு மறுபடியும் சிரிப்பு வந்தது.

சிரித்தாள்.

இம்முறை அவன் எரிச்சலானான்.

''ஏன்.. திரும்பத் திரும்ப சிரிக்கிறாய். நான் கேட்டதற்கு பதில் சொல்?''

அவள் சிரிப்பை சிரமத்தோடு அடக்கிக் கொண்டு அவனைப் பார்த்தாள்.

''ஸார்... ஒரு கதை ஞாபகம் வருகிறது. ஒரு இளம் பெண் இப்படித்தான் பெட்டிக்கடை ஒன்றுக்கு கறுப்பு வெல்லம் வாங்கப் போனாளாம். பெட்டிக்கடைக்காரன் அவளிடம் 'நான் உன்னை கட்டிக் கொள்ள விரும்புகிறேன். கட்டிக் கொள்கிறாயா?' என்றானாம். அவளும் பதிலுக்கு விடாமல், 'பெட்டிக் கடைக்காரரே முதலில் கறுப்பு வெல்லத்தைக் கொடுங்கள். வீட்டிற்குப் போய் காபி போட்டு குடித்துவிட்டு வந்து பதில் சொல்கிறேன்' என்றாளாம்... அதுபோல் தான் நீங்கள் கேட்கும் கதையும் இருக்கிறது...''

அவனது சிவப்பு முகம் சிடுசிடுத்தது.

''பெட்டிக்கடைக்காரனும் நானும் ஒன்றா?'' என்றான் கோபமாய்.

அவள் பதட்டமில்லாமலே அவனைப் பார்த்தாள்.

''நிச்சயமாய் இல்லை ஸார்.. ஆனால் ரெண்டு பேரின் கேள்விகளும், நோக்கமும் ஒன்றுதானே சார்..?''

அவன் தலையைச் சிலுப்பிக் கொண்டு படு சீரியஸான பார்வை அவளைப் பார்த்தான்.

''இதோ.. பார்.. உன்.. பெயர்.. என்ன.. ஆங்.. நந்தினி.. நீ நினைப்பது போல் நான் ஒரு சராசரியாய் சபலத்தோடு கேட்கவில்லை. ஒரு சரியான தொலைநோக்குப் பார்வை யுடன்தான் கேட்கிறேன்...''

''அது.. என்ன தொலை நோக்குப் பார்வை ஸார்? எனக்குப் புரியவில்லை. கொஞ்சம் விளக்கமாகச் சொல்லுங்கள்...''

அவள் போலியான பவ்யம் காட்டியதை சட்டை செய்யாமல் அவன் தொடர்ந்தான்.

''நான் சொல்வதை மேலோட்டமாய் பார்த்தால் உனக்கு தப்பாய்த் தெரியும். ஆனால் கொஞ்சம் ஆழமாய் சிந்தித்தால் உனக்கு எல்லாம் புரியும்..''

''அப்படி ஆழமாய் சிந்திப்பது எப்படியென்றும் நீங்களே கூறி விடுங்கள்..'' காதணிகள் குலுங்கக் கேட்ட அவளது புன்னகையில் பரிகாசம் ததும்பியது.

''அதாவது ஒரு ஆணும் பெண்ணும் வாழ்க்கையில் திருமணம் என்ற பந்தம் மூலம் இணைய வேண்டும் என்பது இயற்கையின் நெறி. நம் வாழ்வின் முறை. சரியாக தான் தேடும் பெண்ணை ஒருவன் சந்திக்கும்போது தன்னை மீறி தன் ஆசையை அவன் வெளியிடுகிறான். அது போல் தான் நானும். நீ எனக்கு ரொம்ப மேட்சாக இருப்பாய் என்று கருதுவதாலே இப்படியொரு வாய்ப்பை உனக்கு அளிக்கிறேன். என்ன சொல்கிறாய்?''

அவன் பேசப் பேச அவளுக்கு காலில் உள்ளதை தூக்கி அடிக்கலாம் போல் தான் இருந்தது.



இருந்தாலும் அதை அடக்கிக் கொண்டு,

''ஹலோ எம்.டி. ஸார், நான் வேலை தேடித்தான் வந்தேன். உங்களிடம் வாழ்க்கை பிச்சை கேட்டு வரவில்லை. அதை ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள்.''

அவன் அதற்கும் வெட்கமில்லாமல் தலையாட்டினான்.

''புரிகிறது... மிஸ் நந்தினி. ஆனால் நான் தரும் வாய்ப்பு... ஒரு ஜாக்பாட்.. ஆஃபர்.. லக்கி பிரைஸ் அடிக்கிற மாதிரி...''

''அடாடா..! அடாடா.. எனக்கு லக்கி பிரைஸா? நான் நினைக்கவே இல்லையே?''

நிஜமாகவே அவள் சூள் கொட்டியபோது அவள் இன்னமும் கேலியை விடவில்லை என்பது புரிந்து அவன் முகம் சற்று சிவந்தது.

''நந்தினி, என்னைச் சாதாரணமாக நினைத்து விடாதே.. மாதம் பல கோடிகள் டர்ன் ஓவர் ஆகும் நம்பர் ஒன் கம்பெனியை நடத்தி வருகிறேன். ஏதோ உன்னை எனக்குப் பிடித்திருக்கிறது என்று வெளிப்படையாக பேசுகிறேன், கேட்கிறேன். இப்படி வலிய வந்து கேட்பதால் என்னை குறைவாகவோ இளக்காரமாகவோ நினைத்து விடாதே. என்னிடம் ஐயாயிரம் ரூபாய் வேலை தேடி வந்திருக்கும் உனக்கு, உன்னை பல கோடி ரூபாய் மதிப்புள்ள சொத்துக்களுக்கு உரிமையாளராய் மகாராணியாய் ஆகச் சொல்கிறேன். இது நிஜமாக ஜாக்பாட் ஆஃபர்தானே? லட்சத்தில் ஒருவருக்குக் கிடைக்கும் லக்கி பிரைஸ்தானே?''

அவன் தொடர்ந்து விடாது சொல்லியது கண்டு அவள் தலை சுற்றத்தான் செய்தது. மை விழிகளை அகல விரித்து

எவ்வித சலனமுமில்லாதவளாய் விழித்துக் கொண்டு தான் இருந்தாள்.

அது அவனுக்கு அவள் யோசிப்பது போல் தோன்றவே, "பதில் அவசரமில்லை. வீட்டிற்குப் போய் நிதானமாய் சிந்தித்து நாளைச் சொல்லலாம்..."

அப்பாடா... தப்பித்தோம்!

அவள் எழுந்து விட்டாள்.

அவன் தன் விஸிட்டிங் கார்டு ஒன்றை நீட்டினான்.

"இதில் எனது செல் நம்பர் இருக்கிறது. உன் முடிவை நீ போனிலே சொல்லலாம்."

"ரொம்ப நன்றி ஸார்."

பவ்யமாய் வாங்கிக் கொண்டு நகர்ந்தவள் நின்று அவனை வினோத பார்வை பார்த்தாள்.

"அப்புறம் இன்னொரு முக்கியமான விஷயம் ஸார்..."

"என்ன?"

"எனக்குப் பிறகு நிறைய அழகிகள் இன்டர்வியூவிற்கு வர காத்திருக்கிறார்கள். அவர்களிடம் நீங்கள் மனசை தளர விடாமல் பார்த்துக் கொள்ளுங்கள்..."

இந்த கேலிக்கு பயப்படுவான் என்று பார்த்தால் அதற்கும் வெட்கமில்லாமல் சிரித்தான்.

"அந்த பயம் உனக்குத் தேவையே இல்லை நந்தினி. ஏனெனில் என்னுடைய இதயம் இப்போது இங்கு இல்லை. அங்கு ஷிப்ட் ஆகி விட்டது." என்றபடி அவள் நெஞ்சைக் காட்ட.. சிவந்த முகம் மேலும் கோபமாய் சிவக்க பல்லைக் கடித்தபடி வெளியே வந்தாள் நந்தினி.



# 3

அத்தோடு நந்தினி அந்த நிகழ்ச்சியையும், இன்டர்வியூ என்ற பெயரில் மோகன மகேந்திரன் நடத்திய கூத்தையும் மறந்து விட்டாள் என்றுதான் சொல்ல வேண்டும்.

தாயும் தந்தையும் ஆர்வமாய் இன்டர்வியூ பற்றி கேட்டபோது கூட, 'கம்பெனி டூபாக்கூர் கம்பெனி போல் தெரிகிறது. வேலை கிடைத்தாலும் வேஸ்ட்...' என்று கூறி வாயடைத்து விட்டாள். அவன் மோகன மகேந்திரன் கொடுத்த விசிட்டிங் கார்டையும் சுக்கு நூறாய் கிழித்து அவன் அலுவலகக் குப்பைத் தொட்டியிலே போட்டு விட்டு வந்தது அடிக்கடி அவள் ஞாபகத்திற்கு வந்து நகைப்பையும் ஏற்படுத்தியது.

ஆனால் மூன்றாம் நாள் மாலையில் அவள் வீட்டு முன் காரில் ஒரு நடுத்தரப் பெண்மணியுடன் வந்து அந்த மோகன மகேந்திரன் இறங்கியபோது அவளுக்கு திக்கென்று தான் இருந்தது.

"யாரம்மா.. இவர்கள்.. நம் வீடு நோக்கி வருகிறார்கள்.. உனக்குத் தெரியுமா?" என பக்கத்திலிருந்த தாய் கேட்ட போது அவள் நிஜமாகவே விழிக்கத்தான் செய்தாள்.

அவன் மோகன மகேந்திரனோ விறுவிறுவென நடந்து வந்தவன், "ஹாய்.. நந்தினி.." என ரொம்ப நாள் பழக்கம் போல் உற்சாகமாய் கூப்பிட்டு கைகளை அசைக்க வேறு செய்தான்.

''அம்மா, இது நான் அன்று இன்டர்வியூவிற்கு போன தாய் சொன்னனே... அந்தக் கம்பெனியின் எம்.டி.ஆள், கொஞ்சம் நட்டு சுழன்ற கேஸ்..'' நந்தினி கிசுகிசுக்க ''என்னம்மா சொல்கிறாய்?'' என்றாள் தாய் திகிலான பயத்தோடு.

''ஆமாம். அன்று நடந்ததை உங்களிடம் சொல்ல வில்லை. இன்டர்வியூ போன இடத்தில் நான் உன்னை கட்டிக் கொள்கிறேன். உனக்கு விருப்பமா? என்றெல்லாம் உளறினார்...''

''அப்படியா..? சரி.. இருக்கட்டும்.. ஆனால் இப்போது.. இங்கு ஏனம்மா வருகிறார்கள்?''

தாய் கேட்டதற்கு புருவம் உயர வியந்தவள் தன் வீட்டை எப்படி இவன் கண்டு பிடித்தான்..? என சிந்தித்த போது இன்டர்வியூவிற்காக அட்ரஸைக் கொடுத்தது அவள் ஞாபகத்திற்கு வந்தது.

அவள் உதட்டைக் கடித்தபடி அதே போஸில் வெறித்திருக்க விறுவிறுவென இருவரும் பக்கத்தில் வந்து விட்டனர்.

அந்த நடுத்தரப் பெண்மணி திரும்பி அவனைப் பார்த்து, ''இதுதான் நீ சொன்ன பெண்ணா?'' என்று கேட்க, அவன் மகேந்திரன், 'யெஸ்! யெஸ்!' என்றபடி வேகமாய் தலையாட்டினான்.

உடனே அவள் திரும்பி இருவருக்கும் பெரிய வணக்கம் வைத்தாள்.

பதிலுக்கு நமஸ்கரித்து நந்தினியும் தாயும் திகைத்துப் பார்க்க, ''உங்களிடம் ஒரு விஷயமாய் பேச வந்திருக்கிறோம் பேசலாமா?'' என்றாள் அவள்.



வேறு வழியில்லாமல், ''வாருங்கள்..'' என உபசரித்து உள் ஹால் அழைத்துச் சென்றார்கள். நடுநயமான சோபாவில் உட்கார்ந்ததும் மகேந்திரன் வீட்டைச் சுற்றும் முற்றும் பார்த்து அளவெடுக்க.. அவளோ நந்தினியை மேலிருந்து கீழ்வரை அளவெடுத்தாள்.

நந்தினிக்கு விஷயம் புரிந்து விட்டது.

கடைசியில் அவளை பெண் கேட்டு வீடு வரை வந்து விட்டானா? அவ்வளவு பெரிய லூசா இந்த மோகன மகேந்திரன்?

துணுக்குற்று அவனையே உற்றுப் பார்க்க அவனும் பெரிய மன்மத கொக்கு பெண் பார்க்க வந்திருப்பது போல் அசடு வழிய நெளிந்து வளைந்து அவளை கோமாளிப் பார்வை பார்த்துக் கொண்டிருந்தான்.

எல்லாவற்றையும் விட அம்மா பூரணிதான் ரொம்பவும் பதட்டமாகியிருந்தாள்.

அடுக்களை பக்கம் விறுவிறுவென ஓடி அவளை சைகையிலே அழைத்தாள். ''என்னடி இது கூத்து? பார்த்தால் பெரிய இடம் போல் தெரிகிறது? இப்படி திடுதிப்பென்று வந்திருக்கிறார்கள்?''

படபடத்த தாயின் கைகளை அழுத்தமாய்ப் பிடித்து சாந்தப்படுத்திய நந்தினி, ''அம்மா, எவ்வித பதற்றமும் வேண்டாம். நான் பார்த்துக் கொள்கிறேன். நீங்கள் காபி மட்டும் கொண்டு வாருங்கள்..'' என்று சொல்லியபடி முன்புறம் வந்து அவர்கள் இருவருக்கும் முன்னால் உட்கார்ந்தாள்.

மகேந்திரன் மெல்ல நிமிர்ந்து பேச்சை ஆரம்பித்தான்.

''நந்தினி... அது... வந்து...''

''சொல்லுங்கள்...''

''அன்று இன்டர்வியூவில் உன்னிடம் முன்பின் யோசிக்காமல் டக்கென்று கேட்டு விட்டேன். பிறகுதான் அது எவ்வளவு பெரிய தவறு என்பது புரிந்தது. எதற்கும் ஒரு முறை என்று இருக்கிறது அல்லவா.. அதான்.. அதனால்தான்...''

மகேந்திரன் மறுபடி தயங்க நந்தினி எரிச்சலை அடக்கிக் கொண்டு, ''ம் ம்.. சொல்லுங்கள்..'' என்றாள்.

''இவர்கள் என் சகோதரி. பெயர் வேலம்மாள். கல்லூரி ஒன்றில் விரிவுரையாளராய் இருக்கிறார்கள்...''

மகேந்திரன் தன் உரை முடிந்தது போல் அத்தோடு பேச்சை நிறுத்த.. அந்த நடுத்தர பெண்மணி தொடர ஆரம்பித்தார்.

''ஆமாமம்மா.. இந்த மகேந்திரன் உன்னைப் பார்த்திருக்கிறான். உடனே அவனுக்கு உன்னை பிடித்துப் போயிற்று. அப்படி பிடித்துப் போனால் முறைப்படி பெரியவர்களிடம் பேசி பெண் கேட்க சொல்வதை விட்டு விட்டு அவனே உன்னிடம் தத்து பித்து என்று உளறியிருக்கிறான். அதையெல்லாம் நீ பெரிதாக எடுத்துக் கொள்ளாதே. ஏனெனில் இது போன்ற விஷயங்களில் அவன் அனுபவ ஞானமில்லாத.. மக்கு..''

சகோதரி தன்னை பேச்சால் குட்டுவதை கூட உணராமல், யாரையோ சொல்வது போல் அவளைப் பார்த்து டூத் பேஸ்ட் விளம்பரமாய் இளித்துக் கொண்டிருந்தான் மகேந்திரன்.

அதற்குள் பூரணி உள்ளிருந்து இருவருக்கும் கப் அண்ட் சாஸரில் காபி கொண்டு வந்து கொடுத்தாள்.



''காபியை குடியுங்கள்...'' சொல்லிய நந்தினி, தாய்க்கு பார்வையாலே, 'நீ ஒன்றும் பயப்படத் தேவையில்லை. நான் சமாளித்து விடுவேன்..' என்ற செய்தியையும் சொன்னாள்.

ஆனால் பூரணியோ பயம் விலகாதவளாய் எல்லோரையும் மாறி மாறி பார்த்துக் கொண்டிருந்தாள்.

மகேந்திரனின் சகோதரி விஷயத்தை பூடகமாய் ஆரம்பித்து மெல்ல மெல்ல சுற்றி வளைத்தவள் கடைசியில் நேரடியாகவே கேட்டு விட்டாள்.

''இதோ பாரம்மா நந்தினி, அவனோ பெரிய தொழிலதிபர். தொழிலில் நிறைய சாதித்தவன். அவனுக்கு உன்னை ரொம்ப பிடித்திருக்கிறது. உன்னை தன் மனைவியாக்கிக் கொள்ள விரும்புகிறான். உன்னுடைய அபிப்ராயம்தான் என்ன..?'' கேட்ட போது நந்தினியால் முன்பு போல் சட்டென எடுத்தெறிந்து முகம் சுண்டி பேச இயலவில்லை. இவ்வளவு ஆர்வமாய் கேட்பவருக்கு புரிகிற மாதிரியாகத்தான் பதில் சொல்ல வேண்டும் என நினைத்தவள் மெல்ல தலையசைப்புடன் அவர்களைப் பார்த்தாள்.

''நீங்கள் கேட்பது புரிகிறது. ஆனால்...''

''எதுவானாலும் சொல்லம்மா...''

''என்னுடைய கல்யாணம் பற்றி இன்னும் இரண்டு மூன்று வருடங்கள் கழித்துதான் யோசிக்க இருக்கிறேன். அதனால் இப்போது அது பற்றி எந்த முடிவுமோ எவ்வித அபிப்ராயமோ என்னிடம் இல்லை. இதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். இது என்னுடைய விருப்பம் மட்டுமல்ல... என்னுடைய பெற்றோர்களின் ஆசையும்

அதுதான்...'' என்றபடி நந்தினி தாயைப் பார்த்து சைகை யுடன் பேச்சை நிறுத்தினாள்.

பூரணி புரிந்து கொண்டு பலமாய் தலையாட்டினாள்.

''ஆமாம்.. ஆமாம்.. குழந்தைக்கு இன்னும் இரண்டு மூன்று வருடம் கழித்துதான் திருமணம் செய்ய நானும் அவரும் முடிவெடுத்திருக்கிறோம். அதனால் அவசர மில்லை. சொல்வதை நீங்கள் தப்பாக எடுத்துக் கொள்ளக் கூடாது...''

பூரணி இப்படிச் சொன்னதும் புரிந்து கொள்வார்கள் என்று பார்த்தால் அவள் அசரவில்லை. ''நீங்க சொல்வது எங்களுக்குப் புரிகிறது. ஆனால் பாருங்கள் எங்களுக்கு அவசரமில்லையம்மா. நந்தினிக்காக நாங்கள் காத்திருக்கத் தயார். இது என்னுடைய அபிப்ராயம் மட்டுமல்ல, மகேந்திரனின் விருப்பமும் அதுதான்...''

சகோதரி சொல்லி முடிக்கவும் பூம்பூம் மாடு போல மகேந்திரனும் தலையாட்டினான்.

''நந்தினிக்காக எத்தனை யுகங்கள் வேண்டுமானாலும் காத்திருக்கத் தயார். அவளுடைய விருப்பம் மட்டும் தெரிந்தால் போதும்...''

மகேந்திரன் அவளைப் பார்த்து அசடு வழிய சிரித்தபடி சொன்னபோது, 'சூப்பர் இளிச்சவாயன்..' என்று சொல் வார்களே அது இவன் போன்ற ஆட்களைத்தானோ..? என்ற வியப்பு தோன்ற அவனையே உறுத்துப் பார்த்தாள்.

ஒரு வழியாய் கடைசியில், ''யோசித்து பதில் சொல் கிறோம்...'' எனச் சொல்லி இருவரையும் தள்ளாத குறையாய் அனுப்பி வைத்தனர்.



அவர்கள் சென்றதும் அதுவரை அடக்கி வைத்திருந்த சிரிப்பலைகளை மேலும் தடுக்க முடியாமல் சிரிக்க ஆரம்பித்தாள் நந்தினி.

## 4

'விஷயம் அத்தோடு முடிந்து விட்டது..' எனத்தான் நினைத்து மகேந்திரன் விஷயத்தை அப்படியே மறந்து விட்டாள் நந்தினி.

ஆனால் மூன்றாவது நாள் தந்தை சிவராமன் அலுவல கத்திலிருந்து சிந்தனை பொதிந்த முகமாய்த் திரும் பியபோது விஷயம் புரிந்தது.

''உட்கார் நந்தினி.. ஒரு முக்கியமான விஷயம்..'' என்றபோது வேலை முடிந்து வந்த களைப்பைக்கூட பொருட்படுத்தாமல் ஹாண்ட் பேக்குடன் எதிரில் உட் கார்ந்தாள் நந்தினி.

''இன்று அவர் என் அலுவலகத்திற்கே தேடி வந்து விட்டாரம்மா...'' என்று சிவராமன் ஆரம்பித்ததும் ''அவரா..? யாரைச் சொல்கிறீர்கள்?'' என்றாள் நந்தினி துணுக்குற்றவளாய்.

''அதான்.. நந்தும்மா; அந்த தொழிலதிபர் உன்னை பெண் கேட்டு வந்த மகேந்திரன்...'' என்றபோது நந்தி னிக்கு நிஜமாகவே தூக்கி வாரிப் போட்டது.

'அந்த லூசு அங்கேயும் வந்து விட்டதா?'

தன்னை மீறி எண்ணத்தை வார்த்தைகளால் வெளிப் படுத்தி விட்டாள் நந்தினி. ஆனால் அதையும் சிவராமன் திருத்தினார்.

''அவரை லூசு என்று கூடச் சொல்ல முடியாது. உன் மேல் பைத்தியமாய் இருக்கிறார். அப்படி ஒரு விருப்பம் பிரியம் உன் மேல் வைத்து இருக்கிறார். உன்னை மண முடிக்க என் காலைப் பிடித்துக் கெஞ்சாத குறைதான். அவ்வளவு பெரிய கோடீஸ்வரர் தொழிலதிபர் என்னிடம் இப்படிக் கெஞ்சுவதைப் பார்த்தால்.. எனக்கே சங்கடமாய் போய் விட்டது...''

நந்தினி கண்கள் விரிய பார்த்துக் கன்னத்தில் கை வைத்தவள் சுவாரஸ்யமானாள்.

''பிறகு எப்படிச் சமாளித்தீர்கள்..?''

''அது ஒரு வழியாய் வீட்டில் பேசி முடிவெடுத்துச் சொல்கிறேன் என்று அனுப்பி வைத்தேன். ஆனாலும் என்னால் நம்ப முடியவில்லை. எல்லாமே வியப்பாய் இருக்கிறது.''

''வியப்பா..? என்னப்பா சொல்கிறீர்கள்?''

''ஆமாமம்மா. அவர் வந்து போனதும் எனது அலுவலக நண்பர்கள் எல்லாம் என்னை பிலுபிலுவென பிடித்துக் கொண்டார்கள். என்ன விஷயம் என்பதை நான் சொன்னதும் அவர்கள் நம்ப முடியாதவர்களாய் மகேந் திரனைப் பற்றிச் சொல்ல ஆரம்பித்து விட்டார்கள்.''

''அப்படியா..? மகேந்திரன் பற்றி அப்படி என்ன சொன் னார்கள்?''

''மகேந்திரன் பெரிய பிஸினெஸ் மேன் மட்டுமல்ல நம் நகரின் நம்பர் ஒன் கோடீஸ்வரராம். சின்ன வயதிலே



தனது சாதுர்யத்தால், கடும் உழைப்பால் இவ்வளவு பெரிய சாம்ராஜ்யத்தை ஏற்படுத்தியிருக்கிறாராம். அவரைப் போன்ற வி.ஐ.பி.களுடன் பேச நான் கொடுத்து வைத் திருக்க வேண்டுமாம். அப்படி இப்படியென என்னவெல் லாமோ சொன்னார்கள்...''

தந்தை சொல்லச் சொல்ல அதற்கு மேல் அடக்க முடியாதவளாய் கலகலவென நகைக்க ஆரம்பித்து விட்டாள் நந்தினி.

சிவராமன் பேச்சை நிறுத்தி விட்டு சீரியஸ்ஸாய்ப் பார்த்தார்.

''என்னம்மா சிரிக்கிறாய்?''

''பின்... என்னப்பா..? அவரைப் பார்த்தால் சின்ன நாகரீகமோ இங்கிதமோ தெரியாத லூசு போல் தான் இருக்கிறது? ஒரு ஆண் மகனுக்குரிய கம்பீரம் கொஞ்சமும் இல்லாமல் இப்படியா ஒரு பெண்ணைப் பார்த்து வழிவது? அவர் வழிந்தது போதாதென்று ஒரு அக்காவை வேறு கூட்டி வந்து வெட்கமில்லாமல் பெண் வேறு கேட்டுப் போய் விட்டார்.''

நந்தினி சொல்ல.. இம்முறை சிவராமன் சிரிக்க ஆரம்பித்து விட்டார்.

நந்தினி புரியாதவளாய் வில் போன்ற புருவங்களை உயர்த்தினாள்.

''என்னப்பா?''

''நீ ஒன்றை மறந்து விட்டாய் நந்தினி. எல்லாவற்றுக் கும் ஒரு முக்கிய காரணமிருக்கிறது. அது என்ன தெரி யுமா?''

''எனக்குத் தெரியவில்லை. நீங்களே சொல்லுங்கள்...''

''உன் அழகு நந்தினி! உன் அபரீதமான அழகு! அதுதான் காரணம். மகேந்திரன் அதில் தான் பிடித்துப் போய் மயக்கமாய் இருக்கிறார்...''

ஆனால் நந்தினி சலித்தாள்.

''நல்ல அழகுப்பா! எல்லாம் குரங்கு பிடித்த கதையாய் இருக்கிறது. இப்படி ஒருவன் பெண் கேட்டு விடாமல் அலைவானா? எனக்கென்னவோ மகேந்திரன் விஷயம் புதிராய்த்தான் இருக்கிறது...''

சிவராமன் அதற்கும் விளக்கமளித்தார்.

''இல்லை நந்தினி. நீ நினைப்பது போல் இல்லை. சில பணக்கார ஆண்கள் ஒரு பெண்ணைப் பார்த்துப் பிடித்து விட்டது என்றால் அவளை எப்படியாவது தன் மனைவி யாக்கிக் கொள்ள வேண்டும் என்ற ஒரே குறியோடு அலைவார்கள். அப்படித்தான் மகேந்திரன் இருக்கிறார் என நினைக்கிறேன்.''

ஆனால் நந்தினி உறுதிப்பட பேசினாள்.

''அப்பா.. அவர் எப்படி வேண்டுமானாலும் எந்தக் குறியோடும் அலைந்து விட்டுப் போகட்டும். ஆனால் எனக்கு இதெல்லாம் எரிச்சலைத்தான் ஏற்படுத்துகிறது. அடுத்த முறை அந்த மகேந்திரன் இது போன்று என்னிடம் ஏதாவது கேட்டு வந்தாரென்றால் அவர் நன்றாக வாங்கிக் கட்டிக் கொள்ளப் போகிறார்... அது மட்டும் உறுதி...''

நந்தினி இவ்விஷயத்தில் தீர்மானமாய்த்தான் இருந்தாள். ஆனால் அடுத்த இரண்டு நாளில் ஊரிலிருந்து



லீவுக்கு குழந்தைகளுடன் வந்த சகோதரி நளினாவின் பேச்சு அவள் உறுதியைக் கலைப்பதாய் இருந்தது.

நளினா அவளை விட மூன்று வயது மூத்தவள். இரண்டு வருடங்களுக்கு முன் திருமணமாகி திருச்சி சென்றவள். கணவருக்கு அரசாங்க அலுவலக வேலை. இரண்டு குழந்தைகள். அளவான குடும்பம். நிம்மதியான வாழ்க்கை என்று இருந்தாலும் அவள் சலித்தாள்.

''ஆனாலும்.. பார் நந்தூ.. இவரைப் போன்ற மாத சம்பளக் காரர்களைக் கட்டிக் கொண்டு நான் படுகிற அவஸ்தை சொல்லி முடியாது...''

நந்தினி வியப்பாய் அவளைப் பார்த்தாள்.

''என்னக்கா சொல்கிறாய்? அத்தான் தான் கை நிறைய சம்பளம் வாங்குகிறாரே.. பின் என்ன கவலை உனக்கு?''

நளினா சற்றே பெருமூச்சு விட்டவாறு அவளைப் பார்த்தாள்.

''என்ன சம்பளம் வாங்கி.. என்ன பிரயோஜனம்? பாதி சம்பளம் லோன் பிடித்தம் அது இதுவென சென்று விடுகிறது. மீதி சம்பளத்தில் அத்தனையும் பட்ஜெட்தான். பட்ஜெட் போட்டுத்தான் செலவழிக்க வேண்டும். மாதம் ஒரு நாள் சினிமா, ஒரு நாள் பீச், ஒரு நாள் பூங்கா, ஒரு நாள் ஹோட்டல் என எல்லாமே அந்த ஒரு நாள் பட்ஜெட் தான். அதற்கு மேல் என்றால்.. அவர் புலம்ப ஆரம்பித்து விடுவார். நேற்று கூட பார் பஸ் ஸ்டாண்டில் இருந்து நம் வீடு வருவதற்கு கூட ஆட்டோக்காரனிடம் ஒரே கசடல் தான். ஐந்து ரூபாய்க்காக பத்து நிமிடம் அவனிடம் வாய்ச்சவடால் அடித்து கூலியை குறைக்க வேண்டிய தாயிற்று. எந்த ஒரு விஷயத்திற்கும் பர்ஸில் இருந்து

ரூபாயை எடுத்துப் பார்த்து செலவழிக்க வேண்டிய கட்டாயம் ஒரு நோட்டு அதிகமாய் போய் விட்டால் பின் மாதக் கடைசியில் விழி பிதுங்கி விடும் நிலைமை எங்களுக்கு!''

அக்கா சொன்னதைக் கேட்டு ஆச்சரியமும் சிரிப்பும் வந்தவளாய், ''அதற்கு என்னக்கா செய்ய முடியும்? இப் போது உள்ள சூழ்நிலை, விலை வாசிகள் அப்படி ஏறி விட்டன...'' என்றாள் சாந்தப் படுத்துபவளாய்.

ஆனால் நளினா மறுப்பாய் தலையசைத்தாள்.

''நான் அதைச் சொல்லவில்லை நந்தினி. நான் சொல்ல வந்ததே வேறு...''

''வேறவா... என்ன சொல்கிறாய்?''

''நீயும் என்னைப் போல் வாழ்க்கையில் மாதச் சம் பளக்காரரைக் கட்டிக் கொண்டு அவதிப்படாதே. கட்டு கட்டாய் சம்பாதிக்கும் பிஸினெஸ் மேன் மாதிரி யாரை யாவது ஒருவனை பிடித்துக் கொள் என்று சொல்ல வருகிறேன்...''

''சரிதான்... நல்ல ஐடியாதான்..!''

நந்தினி ரஸித்து சிரிக்க நளினா திரும்பி அவள் பக்கம் வந்தவள் அவளை சீரியஸாக உற்றுப் பார்த்தாள்.

''நந்தினி, இன்னும் நான் சொல்ல வருவது உனக்குப் புரியவில்லை?''

''புரியவில்லையே...? என்னக்கா சொல்கிறாய்?'' என்றாள் நந்தினி அதே வியப்புடன் தலை சாய்த்துக் கொண்டு.

''அதான் நந்தினி, யாரோ ஒரு பெரிய தொழிலதிபர் உன்னைக் கட்டிக் கொள்ள வேண்டும் என துடியாய்



துடித்து உன்னையே சுற்றி வருகிறாராமே... பேசாமல் அவரை நீ கட்டிக் கொள்ள வேண்டியதுதானே?''

நளினா சர்வ சாதாரணமாய்க் கேட்க அப்போது தான் அவள் எங்கு சுற்றி எதைச் சொல்ல வருகிறாள் என்பது நந்தினிக்குப் புரிந்தது. திடுக்கிட்டுப போனவளாய் அவளையே பார்த்தாள் நந்தினி.

# 5

நந்தினிக்கு சட்டென உரைத்தது.

'அட.. அக்கா நளினா இவ்வளவு சாதுர்யமாய் நம்மிடம் பேசுகிறாளே..?' என்ற வியப்புடன் அவளை நோக்கியவள், ''என்னக்கா அதற்குள் உனக்கு விஷயம் தெரிந்து விட்டதா?'' என்றாள்.

''தெரியும் நந்தினி. அம்மாதான் சொன்னார்கள். இருந் தாலும் நீயும் கொஞ்சம் விளக்கமாகச் சொல்லு. யார் அவர்? எப்படி பெண் கேட்கும் விஷயம் வந்தது?''

அக்கா கேட்டதும் நந்தினி கதை போல் சொல்ல ஆரம் பித்தாள். இன்டர்வியூவில் ஆரம்பித்து அப்பா அலுவல கம் வரை சென்று கேட்டது வரை ஒன்று விடாமல் சொன்னாள்.

நளினா அதிராமல் குதூகலித்தாள். ''அப்ப சரிதான். உன்னைப் பார்த்தவுடன் ரோமான்ஸ். கண்டதும் காதல் அவருக்கு ஸ்டார்ட் ஆயிருக்கு..!''

நந்தினிக்கோ எரிச்சலாய் வந்தது.

''ஐயோ.. அக்கா, நான் அவரை லூசு என்கிறேன்.. நீ போய் காதல் என்கிறாயே?''

ஆனால் அதற்கும் நளினா விளக்கம் கொடுத்தாள்.

''உனக்குத் தெரியாதா நந்தினி? லூசுகள் தான் காதலிப்பார்கள். காதலிப்பவர்களும் அந்த காதல் மயக்கத்தில் லூசுகளாகி விடுவார்கள்...''

நந்தினி போலிக் கோபத்துடன் அவளை முறைக்க அவள் கைகளைப் பிடித்து தட்டியபடி சிரித்தாள் நளினா.

''நந்தினி அதையெல்லாம் விடு. நான் கேட்பதற்கு மட்டும் பதில் சொல்...''

''ம்ம்...''

''அவர்.. பெயர் என்ன சொன்னாய்..? மகேந்திரனா? ஆள் பார்ப்பதற்கு எப்படி? ஹாண்ட்சம்மா..? இல்லை சுமாரா.. இல்லை அதைவிட சுமாரா?''

நளினா கேட்டதும்தான் நந்தினி முதல் முறையாய் மகேந்திரனின் உருவத்தை நினைத்துப் பார்த்தாள்.

கேட்பது பேசுவது என்னவோ கோமாளித் தனமாக இருந்தாலும் நெடுநெடு உயரமாய், திடமான புஜங்களும் கம்பீரமான உடல் வாகும் கூடிய நல்ல பர்ஸனாலிட்டி மகேந்திரனுக்கு. சுருள் தவழும் கேசம், பரந்த நெற்றியில் புரள காந்தக் கண்களால் சடார் சடாரென பார்க்கும்போது அப்படியே வேல் குத்தும் விழிகள் போல் அவளை அது ஊடுருவத்தானே செய்தது?

அதில் ஒரு வசீகரம் இருக்கத்தானே செய்தது?

''என்ன யோசிக்கிறாய்? உருவம் ஞாபகமிருக்கிறதா, இல்லை மறந்து போயிற்றா?''



''ஞாபகமிருக்கிறது..''

''பின் சொல்லு பார்க்கலாம். உன் அபிப்ராயத்தில் எத்தனை மார்க் போடலாம்?''

''மார்க்கெல்லாம் தேவையில்லை. கொஞ்சம் சுமார் ரகம்..'' என இழுத்துச் சொல்ல வந்தவள் தன்னையறியாமலே, ''ஆனால் ஓரளவு நல்ல பர்ஸனாலிட்டி தான்..!'' என்றாள்.

''பின் வேறு.. என்ன..? கட்டிக் கொள்!''

''என்னது..? என்ன சொல்கிறாய்..?''

''கட்டிக்கொள் என்கிறேன்! பின் என்ன நந்தினி? ஆளிடம் பணம் இருக்கிறது. அருவெறுக்கத்தக்க முகம் இல்லையே.. பர்ஸனாலிட்டி வேறு இருக்கிறது என்கிறாய். வேறு.. நீ ஒரு ஆணிடம் என்ன எதிர்பார்க்க வேண்டும்.. எதிர்பார்க்க முடியும்? அதான் சீக்கிரம் முடிவெடு என்கிறேன்.''

நளினா பேசப் பேச நந்தினிக்கு ஆச்சரியத்தை விட எரிச்சலே அதிகமாகியது.

''ஐயோ... கொஞ்சம் நிறுத்துகிறாயா அக்கா? விட்டால்.. நீ பாட்டுக்கு பேசிக் கொண்டே போகிறாய்.. முதலில் என் நிலையை தெரிந்து கொள்...''

ஆனால் அதற்கும் நளினா அசராமல் போலியாய் பவ்யம் காட்டி கை கட்டியவள், ''ம்ம்.. சொல்லம்மா.. அப்படி என்னம்மா.. உன் நிலை?''

''ம்ம்... வரிசையாக சொல்கிறேன். தெரிந்து கொள். முதலில் கல்யாணம் இப்போது செய்து கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தையோ சூழலையோ நான் ஏற்படுத்த

வில்லை. இன்னும் கொஞ்சம் நாள் போகட்டும் என்ற அபிப்ராயம்தான் என்னுடையது. மற்றொன்று...''

''அதையும்.. சொல்லு.. தாயே...''

''திருமணத்தைப் பற்றியே யோசிக்காத நான் யாரைக் கட்டிக் கொள்வது என்பது பற்றியோ, யாரை செலக்ட் செய்வது என்பது பற்றியோ.. எப்படி நினைத்துப் பார்க்க முடியும்? இப்போது உனக்குப் புரிகிறதா?''

அவள் சொன்னதற்கு நளினா பலமாய் தலையாட்டியவள், ''நீ சொல்வது எனக்குப் புரிகிறது. இப்போது நான் சொல்வது உனக்குப் புரிகிறதா என்று பார்...'' என்றவள்,

''எப்படியும் ஒரு நாள் நீ அப்படி கல்யாண மூடு வந்து யாரையோ கட்டிக் கொள்வது பற்றி யோசிக்கத்தான் போகிறாய்.. அப்படி மூடு வந்து முன் பின் தெரியாத யாரையோ கட்டிக் கொள்வதை விட உன் மேல் மயக்கமாயும் கிறக்கமாயும் கிடக்கிற இந்த மகேந்திரனைக் கட்டிக் கொள்ள உனக்கு ஏன் கசக்கிறது? நன்றாக யோசித்து பதில் சொல்.. நந்தூ...''

## 6

நந்தினிக்கே அது எப்படி நடந்தது தான் எப்படி சம்மதித்தோம் என்று தெரியவில்லை. கரைத்தால் கல்லும் கரையும் என்பதற்கேற்ப அவளும் கரைந்து விட்டாள். சம்மதித்து விட்டாள்.

யாரையோ.. ஒருவனை மாப்பிள்ளை என்ற பெயரில் எப்படியும் கைப்பிடிக்கப் போகிறாய்.. அது.. இந்த தெரிந்த மகேந்திரன் என்றால் உனக்கு வசதிதானே? அவனிடம் பணம் இருக்கிறது. உன்னை கண்டு மயங்கி மயங்கி உருகும் இளிச்சவாய்த்தனம் இருக்கிறது. இந்த குவாலிபிகேஷன் போதாதா நந்தும்மா..?'' என அக்கா விடாப்பிடியாய் கேட்டது அவளை ரொம்பவும் யோசிக்க வைத்தது.



எல்லாவற்றையும் விட தன்னை இப்படி விழுந்து விழுந்து நேசிப்பவன் ஒருவனை கட்டிக் கொண்டால் வாழ்க்கை நன்றாகத்தானே இருக்கும் என்ற எண்ணம் மேலோங்கி நின்றது. அதனாலே ரொம்பவும் யோசிக்காமல் அவளது அழகான தலை மெல்ல அசைந்தது.

அந்த சின்ன தலையாட்டல் நளினாவுக்கு போதாதா? 'நந்தினி சம்மதித்து விட்டாள். சம்மதித்து விட்டாள்...' என கூவாத குறையாய் சொல்லி வீட்டில் உள்ள எல்லோரையும் வேகப்படுத்தி விட்டாள்.

அந்த வேகத்தில் நந்தினி முடிவெடுத்து சம்மதம் சொன்ன விஷயம் ஒரு மணி நேரத்திலே மகேந்திரனின் காதுகளை எட்டி விட்டது. சந்தோஷத்தில் திக்கு முக்காடியவனாய் மறுபடியும் சகோதரியை கூட்டிக் கொண்டு அடித்துப் புரண்டு வந்து விட்டான்.

'சம்மதமா? உங்களுக்கு சம்மதம்தானே?' என நம்ப முடியாமல் ஒருவித மகிழ்ச்சிப் பரவசத்துடன் கேட்டவனை வியப்பாய்த்தான் பார்த்தாள் நந்தினி. தன் மேல் இவ்வளவு அன்பா இவனுக்கு..? என அதிசயித்தவள் வழக்கமான தனது முத்துப் புன்னகையை அவனை நோக்கி ஸ்நேகமாய் வீசினாள்.

அதில் அடிபட்டு சரணாகதி அடைந்தவன் போல் மகேந்திரனும் கிறக்கமாய் அவளைப் பார்த்தான்.

நளினாவும் நந்தினியின் காதுகளை கடித்தவள், 'ஆள் நல்ல ஹாண்ட்சம் பர்சனாலிட்டிடி. இவரைக் கட்டிக் கொள்ள ரொம்பவும் யோசித்தாயே... பார்?' என வினவவும் செய்தாள்.

பெரியவர்களை வைத்து கல்யாணப் பேச்சும் ஆரம்பமாயிற்று.

'கட்டிய சேலையுடன் வந்தால் போதும். பொன் நகையை விட புன்னகையே போதும்' என்றெல்லாம் மாப்பிள்ளை சைடில் இருந்து டயலாக்குகள் பறந்தன. நந்தினியின் குடும்பம் இதை எதிர்பார்த்ததுதான் என்றாலும் தந்தை பிடிவாதமாய், ''அதெல்லாம் உங்கள் பெருந்தன்மை. நாங்கள் நந்தினிக்கு செய்ய வேண்டியவற்றை சந்தோஷமாய் செய்வோம்..'' என கறாராய் கூறி விட்டார்.

அத்தோடு மகேந்திரனின் பணக்கார ஸ்டேட்டஸுக்கு ஏற்ப நகரின் பெரிய திருமண மண்டபம் ஒன்றை புக் செய்தார். 'ஒரு நாள் மண்டப வாடகை ஐம்பதாயிரமா? என்ன அநியாயம் இது! ஏனப்பா இப்படி செய்தீர்கள்? என வாய் பிளந்து பூரணியும் நந்தினியும் அதிசயித்து கேள்வி கேட்க அவர்களை, ''உங்களுக்குத் தெரியாது. பெரிய இடம் யாருக்கும் எந்த முகச் சுழிப்பும் வந்து விடக் கூடாது'' என தடிப்போடு போட்டு அடக்கினார்.

கல்யாண முகூர்த்த தேதி குறிக்கப்பட்டு கல்யாண வேலைகள் மின்னல் வேகத்தில் நடைபெற ஆரம்பித்தன. ஆயினும் நந்தினி வீட்டாரை ஒரு விஷயம் பெரிதும் வாட்டிற்று.

எந்த விஷயம் பேசுவதாய் இருந்தாலும் சரி மாப்பிள்ளை மகேந்திரன் சைடிலிருந்து அவனது சகோதரி பெண்மணி



ஒருத்திதான் ஒற்றையாளாய் நடமாடிக் கொண்டிருந்தாள். ஏன்.. வேறு சொந்த பந்தங்கள் கிடையாதா? என ஒரு நாள் அடக்க முடியாமல் வாய் விட்டுக் கேட்டும் விட்டார்கள்.

அதற்கும் சகோதரி பெண்மணியே பதில் கூறினாள். ''அட.. இருக்காமல் இருப்பார்களா? மகேந்திரன் சிறு வயதிலே தாய் தந்தையை இழந்து விட்டாலும் அத்தை, மாமா, சித்தப்பா, சித்தி, என ஒரு பெரிய பட்டாளமே இருக்கிறது. ஆனால் அவர்கள் எல்லோரும் என்.ஆர்.ஐ. என சொல்லப்படும் வெளிநாட்டு வாசிகள், யூ.எஸ்., யூ.கே. ஆஸ்திரேலியா என வெவ்வேறு இடத்தில் இருக்கிறார்கள். கல்யாண சமயம் பாருங்கள். எல்லோரும் வந்து திக்கு முக்காட வைக்கப் போகிறார்கள்...''

நந்தினி குடும்பத்தார் பதிலால் திருப்தி அடைந்தாலும், 'பணமிருப்பதால் சுற்றத்தாரை விலக்கி சண்டை போட்டு விட்டார்களோ?' என்ற சந்தேகம் அவர்களை நெருடிக் கொண்டே இருந்தது.

நந்தினி இது பற்றியெல்லாம் அதிகம் கவலை கொள்ளா விட்டாலும் அவளுக்கு வேறொரு விஷயம் குடைச்சல் கொடுத்துக் கொண்டிருந்தது.

வேறு என்ன? மகேந்திரன்தான் மாப்பிள்ளை என்கிற முறுக்கு கொஞ்சமாவது வேண்டாம்? இன்னும்.. பல்லை இளித்துக் கொண்டு தினம் அவள் முன் தோன்றி அசடு வழிந்து கொண்டிருந்தால் அவனைப் பற்றி அவள் என்னதான் நினைப்பாள்? நினைக்கக் கூடும்? தினம் நேரில், அல்லது போனில் என அவளிடம் பேசுவதை, பேசி அறுப்பதை வாடிக்கையாகவே கொண்டிருந்தான் மகேந்திரன்!

பேச்சு என்றால் அப்படி ஒரு பேச்சு. அட.. இப்படியும் ஒருவரால் அறுக்க முடியுமா? என நினைத்து காதை குடையுமளவுக்கு, சுவாரஸ்யமில்லாத, ஒன்றுக்கத்த விஷயங்கள் பெரிதாய் ரசித்து அவன் சொல்லும்போது.. என்ன இவனது ரசனை? என அவள் பயப்படவே செய்தாள்.

போனில்தான் இப்படியென்றால் நேரில் அதைவிட ஒருபடி மேலாக நடக்கும்.

தனது பெரிய காரை வீட்டு முன்னால் நிறுத்தி விட்டு பவ்யமாய் வந்து கேட்பான். ''நண்பன் ஒருவனுக்கு பத்திரிகை கொடுக்க வேண்டும். நந்தினி கூட வந்தால் நன்றாக இருக்கும்..'' என அனுமதி கேட்டு அவளை அழைத்துப் போவான்.

நந்தினியும் ஓரளவு உற்சாகத்துடன் தான் அவனுடன் கிளம்புவாள். அவள் இயல்பாகப் பேசினாலும் அவன் பேச்சில் வழிவதை பார்க்கத்தான் அவளுக்கு எரிச்சலாக இருக்கும். கல்யாணத்திற்குத்தான் சம்மதித்தாயிற்றே. இன்னும் ஏன் இப்படி ஒரு வழிசல்? என அவள் வியக்காம லில்லை.

சில சமயங்களில் நமக்காக இப்படியெல்லாம் ஒருவன் உருகுவானா..? என அதிசயிக்கவும் செய்வாள்.

அந்த அதிசயித்திலே கண்ணாடி முன் நின்று தன்னையே கண் கொட்டாமல் அவ்வளவு அழகா நாம்..? என வியந்து பார்த்துக் கொள்வது உண்டு.

ஒரு வழியாய் கல்யாண வேலைகள் மளமளவென்று நடந்து முகூர்த்த நாளை நெருங்கிக் கொண்டிருந்தது; அனுப்ப வேண்டிய இன்விடேஷன், நேரிடையாய் சொல்ல



வேண்டிய அழைப்புகள், தூரத்துச் சொந்தங்கள், பால்ய நட்புகள் என ஒவ்வொன்றாய் ஞாபகப்படுத்தி வேலை களைச் செய்தார்கள்.

அதுவும் நந்தினியின் ஒன்றுவிட்ட பாட்டி, அத்தை, சின்னம்மா, பெரியம்மா என அனைத்து உறவினர் பட்டாளமும் வந்துவிட வீடே கல்யாணக் களை கட்டி பரபரப்பானது. பெருசுகளின் ஓயாத பேச்சும் சிறு வாண்டுகளின் விளையாட்டு அட்டகாசமுமாய் வீடே மகிழ்ச்சியில் திளைத்திருக்கும் போதுதான் இடியாய் அந்த விஷயம் நந்தினியைத் தாக்கியது.

கல்யாணத்திற்கு இரண்டு நாள் முன்னதாக வழக்கம் போல் அவளை வெளியே அழைத்துச் சென்ற மகேந்திரன் ரெஸ்ட்டாரண்ட் ஒன்றில் வைத்து அவளிடம், ''நந்தினி இந்தக் கல்யாணம் நடக்காது. நிறுத்தப் போகிறேன்!'' என்றான் எவ்வித சலனமுமில்லாத குரலில்.

## 7

நந்தினி அவன் சொன்னதைக் கேட்டு அவன் விளையாடுகிறான் என்றுதான் நினைத்தாள். ஆனால் விளையாட்டுக்காகக் கூட இப்படி அபசகுணமாய் பேசக் கூடாது என்பது போல் அவள் சொல்ல வர... என்றுமில்லாததாய் அவன் குரல் கணீரென உயர்ந்து 'முட்டாளே..' என விளித்தபோது.. அப்படியே அதிர்ந்துதான் போனாள்.

அவள் திடுக்கிட திடுக்கிட.. ஊசியாய் விஷயத்தை ஏற்றினான் மகேந்திரன். ''முட்டாளே.. உன் அழகில்

கிறங்கிப் போய் உன்னை மண முடிக்க வந்த இளிச்சவாயனாகத்தானே என்னை நினைத்துக் கொண்டிருக்கிறாய். முதலில் உன் நினைப்பை மாற்று..!''

அதிகாரமாய் கர்ஜனைக் குரலில் திடும்மென அவன் சீறுவதைக் கண்டு நம்ப முடியாமல் கண்களை விரித்து உறுத்துப் பார்த்தாள்.

அவள் பார்த்த அதே மகேந்திரன் தான்! ஆனால் முன்பு பார்த்த அசட்டுத்தனம் இல்லாமல் கம்பீரமாய் நெஞ்சை நிமிர்த்தி கோபாவேசமாய் கண்களை உருட்டிக் கொண்டு.. விழிகளா.. அவை? முன்பு போல் சாந்தமும் கனிவும் இல்லாமல் கடித்துக் குதறும் புலியின் வெறித்தனத்தோடு...

என்னாயிற்று இவனுக்கு..?

திடீரென மூளை குழம்பி விட்டதா... புத்தி பேதலித்து விட்டதா? நிஜமாகவே என்னவோ இவனுக்கு ஆயிற்று.. என நம்பியவளாய் நந்தினி எழுந்தவள்,

''வாருங்கள் மகேந்திரன். உடனே வீட்டிற்குப் போவோம். கொஞ்சம் ரெஸ்ட் எடுங்கள்...'' என அவள் அக்கறையாய் பேசி வார்த்தைகளை முடிக்கும் முன்பே அவன் சீறினான்.

''முதலில் உன் இருக்கையில் உட்கார்.''

தெள்ளத் தெளிவாய் அதட்டும் குரலில் சீறியவன், ''எனக்கு ஒன்றும் ஆகவில்லை. நான் நன்றாகத்தான் இருக்கிறேன். இனி புத்தி பேதலிக்கப் போவது உனக்குத் தான்...''

''என்ன சொல்கிறீர்கள் மகேந்திரன்?''

வியப்பாய் விழி உயர்த்தியவளின் முகத்தருகே விரல்களால் வேகமாய் சொடுக்கிட்டான்.



''இன்னுமா உனக்குப் புரியவில்லை. இவ்வளவு நாள் உன் முன்பு நான் அப்பாவியாய் இளிச்சவாயத்தனமாய் நடந்து கொண்டது வேஷம்! நடிப்பு..! எல்லாம் உன்னை ஏமாற்றத்தான்! பழி வாங்கத்தான்..!''

கடகடவென சொல்லிவிட்டு அவன் வெறித்தனமாய் சிரித்தபோது தான் நந்தினிக்கு சுரீரென உரைத்தது.

அவன் விளையாடவில்லை. அவனுக்கு புத்தி பேதலிக்கவில்லை. நிஜம்மாக.. நிஜமாகவே தெளிவாய் பேசுகிறான்.

திடும்மென மனதளவில் அதிர்ந்தவளாய் தடுமாறினாள்.

''என்ன.. சொ..ல்.. கிறீர்கள்? நடிப்பா..? இவ்வளவு நாள் என்னுடன் பழகியது நடிப்பா?''

அவள் குரல் நடுங்க கேட்க அதற்கு சிறிதும் அதிராமல் ரசித்துச் சிரித்தான் அவன்.

''நடிப்பு.. பழகியது மட்டுமல்ல. உன்னை காதலித்தது... ஏதோ.. உலக மகா ரதி போல உன் அழகில் ஜொள் விட்டு வழிந்தது. உன்னை கிறக்கமாய் சுற்றி வந்தது.. எல்லாம் எல்லாமே என்னுடைய நடிப்புத்தான்! திட்டமிடப்பட்ட என்னுடைய பிளான்தான்..!''

''என்ன பிளானா?''

''ஆம்.. பிளான்தான்..! அந்த நடிப்பு பிளானின் உச்சக்கட்டம் நம் கல்யாணம்..! ஆனால் அதுதான் நடக்கப் போவதில்லையே...!''

வெறித்தனமான சிரிப்பை மறுபடியும் உதிர்க்க அதிர்ந்தாள்.

''கல்யாணம் நடக்காதா? என்ன சொல்கிறீர்கள்? பத்திரிகை அடித்து... எல்லோருக்கும் கொடுத்து.. நாளை ஒரு தினம் கழிந்தால் கல்யாணம்.. இப்போது.. நடக்காது என்றால்.. எப்படி.. எப்படி?''

மூச்சு வாங்க அவள் வெகுண்டு கேட்டதற்கு ரொம்ப நேரம் சிரித்து ஓய்ந்தவன் அடக்க முடியாத நகைப்பு தொடர, ''என்னுடைய பிளானே அதுதானே? இப்படி கனை கட்டி வந்து கடைசி நேரத்தில் கல்யாணத்தை நிறுத்தத் தானே... திட்டமிட்டேன்...? இதோ.. இன்று அப்படியே செய்யப் போகிறேன்... நான் நினைத்ததை சாதித்து விட்டேன்...!'' என்றான் பெருமிதமாய்.

அவளுக்கு நிஜமாகவே தலை சுற்றியது. இரு கரங்களாலும் தலையை அழுந்தப் பற்றிக் கொண்டவள் கிலி படர்ந்த முகமாகவே அவனைப் பார்த்தாள்.

''மகேந்திரன், நீங்கள் சொல்வது எல்லாம் நிஜம்மா? இல்லை.. என்னிடம் பயம் காட்ட விளையாடுகிறீர்களா? ப்ளீஸ் இனியும் விளையாடாதீர்கள்.. சொல்லி விடுங்கள். எனக்கு பயமாய் இருக்கிறது...''

அவள் நடுங்க அவன் கைகளை வேகமாய் தட்டினான்.

''பேஷ்.. இன்னும் என்னை இளிச்ச வாயனாகத்தான் நம்பிக் கொண்டிருக்கிறாயா..? சரியான டியூப் லைட் தான்... நீ..! எங்கே.. கொஞ்சம் என்னை நன்றாக உற்றுப் பார்.. என்னை.. எனது பர்ஸனாலிட்டியைப் பார்த்தால் உன்னிடம் கிறங்கிப் போய் கிடக்கிற ரகம் மாதிரியாய் இருக்கிறது?''

அவன் கேட்டு விட்டு அவளையே உறுத்து நோக்க அப்போதுதான் அவனை பார்ப்பது போல் அதிசயித்துப் பார்த்தாள்.



நல்ல திடமான புஜங்களும் ஆஜானுபாகுவான உடம்புமாய், நெடிய உயரத்தில் சுருள் முடி பரந்த நெற்றியில் தவழ அவன் நின்று கொண்டிருந்தது பிடறியை உலுக்கியபடி நிற்கும் முரட்டுச் சிங்கத்தின் தோற்றத்தை பிரதிபலித்தது.

உதடுகளில் இறுக்கமான அந்த கடுமைத்தனம். கண்களில் அந்த வெறி...

அவன் சொன்னது உண்மை. இந்தத் தோற்றமும், இந்த கம்பீரமும் நிச்சயமாய் வழிகிற கேஸ் இல்லை. அவன் வழியவுமில்லை!

அவள்தான் ஏமாந்திருக்கிறாள்! அவன் நடித்திருக்கிறான். அவளைக் கண்டு மயங்கி கிறங்குவது போல் நன்றாக நடித்திருக்கிறான். அந்த நடிபபு கல்யாணம் வரை வந்து விட்டதே..! அதை இவ்வளவு காலமும் உணராமல் அவளும் வெகுளியாய் இருந்திருக்கிறாளே..!

எதற்காக இப்படிச் செய்தான்? எதற்காக இப்படி ஒரு நடிப்பு நடித்தான்?

அவன் கேள்விகளுக்கு பதில் சொல்வது போல் தனது பாக்கெட்டிலிருந்த ஒரு புகைப்படத்தை எடுத்து அவளிடம் நீட்டினான்.

''இதைப் பார்... உனக்குப் புரியும்..'' என்றான் அதே கர்ஜனைக் குரலில்.

# 8

மகேந்திரன் நிதானமாய் அந்த போட்டோவை எடுத்து அவள் கைகளில் கொடுத்தான்.

அந்த பாஸ்போர்ட் சைஸ் புகைப்படத்தை விரல் நடுங்க வாங்கிய நந்தினி அதில் தெரிந்த உருவத்தைப் பார்த்து அப்படியே அதிர்ந்தாள்.

"இது... இது.. கிரி.. கிரி.. கிரிதர்தானே..?"

தன்னையறியாமல் வார்த்தைகளை உச்சரிக்க, "ஆம்.. அதே கிரிதர்தான்! என் அண்ணன்!" என முடித்து வைத்தான் அவன் இறுக்கத்தோடு.

"என்ன கிரிதர் உங்கள் அண்ணனா?"

அவள் வியப்பு மேலிட கூச்சலிட அவன் நிதானமாய் அவளை உறுத்துப் பார்த்தான்.

"சொந்த.. உடன் பிறந்த அண்ணன்! நன்றாக உற்றுப் பார்.. அவரது முகச் சாயல் என் முகத்தில் தெரியவில்லை?"

நந்தினி அப்போதுதான் அதை கவனித்தாள். அவன் சொல்வது உண்மை. கிரிதரின் முகச் சாயல் ஏறக்குறைய அவனுக்கும் இருக்கிறதே! இதை எப்படி அவள் கவனிக்க மறந்தாள்?

அவளுக்கு இப்போது மெல்ல புரிய ஆரம்பித்தது. அவனது கோபம், ஆத்திரம்.. நடிப்பு.. பாசாங்கு.. என எல்லாவற்றுக்கும் மூலமான விஷயம் காரணம் புரிந்து விட்டது.

கிரிதர் அவள் குடும்பத்தால் பாதிக்கப்பட்டவன். அதற்கு பழி வாங்க இப்படியொரு திட்டம் போட்டு வந்திருக்கிறான். என்ன ஒரு வஞ்சம்!

"அப்படியானால்... அப்படியானால்.. எங்கள் குடும்பத்தை பழி வாங்க அவமானப்படுத்த இப்படிச் செய்திருக்கிறீர்கள்..?"



அவள் துடித்துக் கேட்க அவன் அமைதியாய் மூச்சிழுத்தான்.

"அப்பாடா..! உன் ட்யூப்லைட் மூளைக்கு இப்பவாவது புரிந்ததே..!"

"அது அநியாயம்..! தரம் கெட்ட செயல்..!"

அவன் சிரித்தான்.

"நான் செய்ததா..? இல்லை.. என் அண்ணனுக்கு நீங்கள் செய்ததா.. எது தரம் கெட்ட செயல்..?"

"நாங்கள் செய்ததில் நியாயம் இருக்கிறது. உங்கள் அண்ணனுடைய பழக்க வழக்கங்கள் அப்படியொரு முடிவை எடுக்க வேண்டிய சூழ்நிலையை உண்டாக்கிற்று.."

அவன் நிமிர்ந்து அவளையே முறைத்துப் பார்த்தபடி கைகளைக் கட்டினான்.

"முடிவெடுத்தோம்.. என்று லேசாக சொல்கிறாயே.. அப்படி ஒரு முடிவு எடுத்ததால் என்ன நடந்தது என்று உனக்குத் தெரியுமா?"

"அப்படி என்ன நடந்தது?"

"என் அண்ணன் கிரிதர் அதனால் தன் வாழ்க்கையையே முடித்துக் கொண்டான்.." பெரும் சோகப் பெருமூச்சுடன் அவன் சொல்ல அவள் பயங்கரமாய் திடுக்கிட்டாள்.

"என்ன.. என்ன.. சொல்கிறீர்கள்? வாழ்வை முடித்துக் கொண்டாரா?"

"ஆம். அதுவும் தற்கொலை..!"

அவன் உச்சரிக்க.. உச்சரிக்க.. நந்தினி அதிர்ந்துதான் போனாள்.

அவள் வீட்டில் எடுத்த முடிவு.. தற்கொலை பண்ணுமளவுக்கு கிரிதரை பாதித்து விட்டதா?

இது பற்றி துளியளவும் அவள் குடும்பத்திற்குத் தெரியாமல் போயிற்றே?

அவள் திகைப்பை அறிந்தவன் போல் அவன் வார்த்தைகளை வீசினான்.

''கிரிதர்.. அவ்வளவு தூரம்.. உன் அக்கா நளினாவை விரும்பியிருக்கிறான். நேசித்திருக்கிறான். அது புரியாமல் நீங்கள் எடுத்தெறிந்து வீசி இருக்கிறீர்கள். இப்போது புரிகிறதா?''

அவன் மறுபடியும் சொடுக்கிட்டு கேட்க அவள் மெல்ல தலையை ஆட்டினாள்.

அவளுக்கு அவனது ஆத்திரம் புரிந்தது. அதில் நியாயம் இருப்பதாய்க் கூட தோன்றியது. சொந்த அண்ணனின் உயிர் போகுமளவுக்கு விஷயம் போய் விட்டதால் இந்த ஆத்திரம்.. இந்த பழிவாங்கும் உணர்ச்சி..

அவன் தன் பக்க காரணத்தைச் சொல்லி விட்டான்.

ஆனால்.. அவள் பக்கமும் நியாயம் இருக்கிறதே! அவள் குடும்பம் ஒன்றும் பொய்யைச் சொல்லவில்லையே... உண்மையைத்தானே சொன்னார்கள்..? அந்த உண்மை கிரிதரை சுட்டு அவன் இப்படிச் செய்து கொண்டால் அவர்களா பொறுப்பு? நினைத்தவள் நடந்த விஷயங்களை ஒருமுறை சிந்தித்துப் பார்த்தாள்.

இரண்டு வருடங்களுக்கு முன் நடந்த சம்பவம் இது. நளினாவை கிரிதருக்கு மணமுடிக்க ஒரு கல்யாண புரோக்கர் மூலம் பேச்சு ஆரம்பமாயிருந்தது. பெண் பார்த்து பிடித்துப் போய் மாப்பிள்ளையை பார்க்க அழைப்பு



விடுத்தார்கள். கிரிதர் சொந்தமாக ஷிப்பிங் நிறுவனம் ஒன்று வைத்து நல்ல வசதியில் இருக்க.. நந்தினி குடும்பத்தாருக்கு அவனைப் பிடித்துப் போய் உடனே கல்யாணத்திற்கு ஓ.கே. சொல்லி விட்டார்கள்.

முகூர்த்த தேதி குறிக்கப்பட்டு மண்டபம் புக் செய்து.. இன்விடேஷன் அடித்து.. கல்யாண வேலைகள் மளமளவென்று நடந்து கொண்டிருக்க.. அந்த சமயத்தில் அந்தச் செய்தி நந்தினி குடும்பத்தாரின் காதுகளை எட்டியது.

மாப்பிள்ளை கிரிதருக்கு குடிப் பழக்கம் உண்டு. தினம் இரவானால் அவனால் மது அருந்தாமல் இருக்க முடியாது என்று ஆதாரத்துடன் ஒரு நண்பர் மூலம் விஷயம் வெளிப்பட்டு விட்டது. எல்லோரும் என்ன செய்வது.. என்று திகைக்க.. நளினா ஒரே போடாய் போட்டு விட்டாள்.

'ஒரு குடிகாரருக்கு மனைவியாய் என்னால் வாழ்க்கைப் பட முடியாது; உடனே கல்யாணத்தை நிறுத்துங்கள்..' என்று. அப்பா அம்மாவுக்கும் வேறு வழி தெரியவில்லை. மணப்பெண் இவ்வளவு உறுதியாய் இருக்கும் போது அவர்களால் என்ன செய்ய முடியும்?

வேறு வழி தோன்றாதவர்களாய் கல்யாணத்திற்கு இன்னும் இரண்டு நாளே இருக்கும் சமயத்தில் மாப்பிள்ளை வீட்டாரிடம் பக்குவமாய் சொல்லி தடாலடியாய் கல்யாணத்தை நிறுத்தினார்கள்.

இதனால் பெரிய அவமானம்தான்.. கேள்விகளுக்கு பதில் சொல்ல முடியாத தலை குனிவுதான். கிரிதருக்கு மட்டுமல்ல. அவள் வீட்டாருக்கும் தானே? எத்தனை கேள்விகள். எத்தனை விசாரிப்புகள். எல்லாவற்றுக்கும் மழுப்பி மழுப்பி பேசி சமாளிப்பதற்குள் போதும் போதும் என்றாயிற்றே!

ஆக.. பாதிப்பு அவனுக்கு மட்டுமல்ல. அவர்கள் வீட்டாருக்கும்தானே!

என்ன.. கிரிதர் இப்படிச் செய்வான் என யாரும் எதிர் பார்த்திருக்க மாட்டார்கள்... யாராவது இப்படி ஒரு முடிவை கிரிதர் எடுக்கப் போவதை உணர்ந்து தடுத்திருக்கலாம் தானே?

அதையே அவள் கேள்வியாய் கேட்டபோது அவன் சீறினான்.

''எப்படி.. எப்படி தடுக்க முடியும்? நீங்கள் கல் யாணத்தை நிறுத்திய விஷயம் தெரிந்ததுமே தனது குடிப் பழக்கத்தினால்தான் இப்படி ஆகி விட்டது என்பதை நொடியில் புரிந்து கொண்டான்.

இதில் நளினாவின் போட்டோவை வேறு நீங்கள் கொடுத்திருந்தது... அவள்தான் தனக்கு மனைவியாய் வரப் போகிறவள் என பல கலர் கனவுகளை எதிர்காலத் திட்டங்களை அவனை எண்ணச் செய்திருந்தது.

அப்படி அவன் எண்ணிய விஷயங்கள் யாவும் ஒரே நொடியில் தூள் தூளாகிப் போனதை அவனால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. யாரிடமும் சொல்லாமல் கொள் ளாமல் உடனே கதவை தாளிட்டு தூக்கு மாட்டிக் கொண்டான். எங்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை. எங்கள் கண் முன்னாலே எல்லாம் நடந்து விட்டது. எவ்வளவு பெரிய அதிர்ச்சி தெரியுமா?''

அவன் மூச்சு வாங்கப் பேசிவிட்டு ஓரிரு நிமிடங்கள் நீளமாய் மூச்சிழுத்து தன்னை ஆசுவாசப்படுத்தினான்.

கொஞ்ச நேரம் பேசாமல் அவளும் அவனையே வெறித்தவள் மெல்ல கேட்டாள்.



''இதில் நாங்கள் என்ன தப்பு செய்தோம்? உண் மையை.. உங்கள் அண்ணனுக்கு இருந்த குடிப் பழக் கத்தைச் சொன்னது தப்பு என்கிறீர்களா?''

''அது தப்பு இல்லை. விஷயத்தை பட்டென உடைத்துச் சொன்னதுதான் தவறு. பக்குவமாய் சொல்லியிருக்க வேண்டும். அதை விட்டு விட்டு ஒரு குடிகாரன் என கேவலப்படுத்தி அவன் மனம் நோகடையச் செய்து அவன் தற்கொலைக்குக் காரணமாகி விட்டீர்கள்.. அது.. அது.. மன்னிக்க முடியாத குற்றம்...!''

''அவர்.. கிரிதர் உயிரைப் போக்கிக் கொள்ளுமளவுக்கு போய் விடுவார் என்று நாங்கள் நினைக்கவில்லை.''

''நாங்களும் நினைக்கவில்லையே... ஆனால் அப்படி நடந்து விட்டதே..!'' விட்டேற்றியாய் கைகளை வீசிச் சொன்னபடி அவன் முறைக்க ஆரம்பிக்க.. அவளும் தைரியம் கொண்டவள் போல் நிமிர்ந்து பார்த்தாள்.

''சரி.. இப்போது.. அதற்காக பழி வாங்கப் போகிறீர்களா? அதே போல் இரண்டு நாள் முன்னதாக கல்யாணத்தை நீங்கள் நிறுத்தி..''

அவள் முடிப்பதற்குள் அவன் குறுக்கிட்டான்.

''நீ சொன்னதில் ஒரு சின்ன திருத்தம் செய்து கொள். கல்யாணத்தை நான் நிறுத்தப் போவதில்லை. நீ.. நீதான் நிறுத்த வேண்டும்...''

அவள் அதிர்ந்து போனாள்.

''என்ன.. நான்.. நானா?''

அவன் பதில் சொல்லாமல் தலையை மட்டும் வேக மாய் அசைக்க அவள் கோபம் கூடியது.

''எதற்கு? நான் ஏன் நிறுத்த வேண்டும்? பழி வாங்க நினைப்பது நீங்கள்தானே?''

அவன் விஷமமாய் சிரித்தான். ''இப்படி கல்யாணத்தை நீயே நிறுத்தி அதன் மூலம் உனக்கு ஒரு நீங்காத அவப் பெயர் ஏற்பட வேண்டும் என்பதும் எனது பழி வாங்கலின் ஒரு அம்சம்...''

அவன் பேச்சில் மிகவும் எரிச்சலாகி நிமிர்ந்தாள்.

''நான் அப்படி நிறுத்தா விட்டால்.. என்ன செய்வீர் களாம்?''

அவன் விஷமச் சிரிப்பை விலக்காமல் பார்த்தான்.

''அதற்கும் ஒரு வழி வைத்திருக்கிறேன். மறுப்பேதும் சொல்லாமல் உன் கழுத்தில் தாலி கட்டுவேன். மனைவி என்ற பெயரில் ஆசையாய் வரும் உனக்கு நரகம் எப்படி இருக்கும் என புரிய வைப்பேன்!''

## 9

'இரண்டில் ஒரு முடிவு. நீயே எடு. ஆனால் எதை எந்த முடிவை எடுத்தாலும் உனக்கு நரகம்தான். உன்னை சும்மா விடப் போவதில்லை... அசரீரி போல் மகேந் திரனின் வார்த்தைகள் ஒலித்துக் கொண்டிருக்க நந்தினி அன்று முழுதும் சிந்தித்தாள்.

அவன் சொல்வது போல் ஏதாவது காரணத்தைச் சொல்லி கல்யாணத்தை நிறுத்தி விடலாம். ஆனால் அதனால் ஏற்படும் விளைவு..? அப்பா சேமிப்பு.. பிக்சட்



டெபாஸிட் என எல்லாவற்றிலும் இருந்து கிட்டத்தட்ட ரெண்டு லட்ச ரூபாய் வரை கல்யாண செலவுகளுக்காக ஒதுக்கி செலவழித்துக் கொண்டிருக்கிறார். அந்தப் பணம் முழுவதும் வீண் செலவாகிவிடுமே?''

பணத்தை விடுவோம். கல்யாணம் நின்று போனால் அப்பா அம்மாவின் மனநிலை எப்படி ஆகும்? அப்படியே துடித்துப் போய் விடுவார்களே..? செல்ல மகளுக்கு இப்படி ஆகி விட்டதே என இடிந்து போவார்களே...?

அதிலும் அம்மா பயந்த சுபாவம். இது இல்லா விட் டால்.. இன்னொன்று.. என ஸ்போர்ட்டிவ்வாய் எடுத்துக் கொள்ளத் தெரியாதே! அதையே நினைத்து மனதளவில் குமைந்தபடி அல்லவா ஆகி விடுவார்கள்!

அப்படியே யோசித்தவள் சட்டென மனநிலையை மாற்றியும் சிந்தித்துப் பார்த்தாள். ஒருவேளை துணிச்ச லாய் கல்யாணத்தை நிறுத்தாமல்... மகேந்திரனுக்கு கழுத்தை நீட்டினால் என்ன நடக்கும்?

மகேந்திரன் கண்களை உருட்டி அவளிடம் சொன்னது போல், அவளை நரகமாய் 'டார்ச்சர்' செய்யக் கூடும். வார்த்தைகளால், நடவடிக்கைகளால் துன்புறுத்தக் கூடும். அவளை குத்தி குத்தி பேசி நோகடிக்க முடியும். அடிக்கடி வாடச் செய்து அவளை ரசிக்க முடியும். அதில் குரூரமாய் தன்னைப் பழி வாங்கி விட்ட திருப்தி அவனுக்கு ஏற்படக் கூடும்.

செய்யட்டுமே..! எவ்வளவு காலம் அவனால் அப்படிச் செய்ய முடியுமோ.. அவ்வளவு காலம் அவன் செய்யட்டுமே...!

அவளும் அதை தன் குடும்பம் செய்த குற்றத்திற்கு தண்டனை போல் ஏற்றுக் கொண்டால்தான் என்ன?

அட்லீஸ்ட் ஒரு உயிர் போவதற்குக் காரணமாய் இருந்து விட்டோமே.. என்ற உறுத்தலில் இருந்தாவது கொடுக்கும் தண்டனையை வாங்கிக் கொண்டு விடுபடலாம் அல்லவா...?

திரும்பத் திரும்ப சிந்தித்துப் பார்த்தாள். பிரச்சினைக்கு பயந்து பின் வாங்குவதை விட எதிர்கொள்வதே மேல் என்று தோன்றியது.

மேலும் கல்யாணத்தை நிறுத்தினால் மொத்தமாய் அவள் குடும்பம் முழுவதும் அதிர்ந்து பாதிக்கப்படும். அதே நேரத்தில் துணிந்து அவனுக்கு மனைவியாய் சென்று விட்டால்... பாதிப்பு அவளுக்கு மட்டும்தான்! அவன் என்ன கொடுமை படுத்தினாலும் நாலு சுவற்றுக்குள் அதைத் தாங்கிக் கொண்டு, கண்ணை கசக்கிக் கொண்டு இருந்து விடலாம்.

நீண்ட நேரம் யோசித்தவள் அந்த முடிவை எடுத்து உடனடியாய் அன்று மாலையே அவனிடம் தெரிவித்தாள்.

அவள் சொல்லச் சொல்ல அவன் முகம் விஷமத்திற்கு போனது.

''பேஷ்... நல்ல முடிவுதான்! நீ இப்படிச் சொல்வாய் என நான் எதிர்பார்த்ததுதான். ஆனாலும்.. சரியான நெஞ்சழுத்தம்டி உனக்கு... இவ்வளவு சொல்லியும் துணிச்சலாய் மனைவியாய் வருகிறேன் என்கிறாயே... உன்னையெல்லாம் எந்த வகையில் சேர்ப்பது?'' என்றவன் முகம் கன்ற, ''ஆனால் ஒன்று. நான் மட்டும் மனம் மாறிவிடுவேன் என்று நினைக்காதே. ஒவ்வொரு நாளும்.. ஏன் ஒவ்வொரு நொடியும் உன்னை துன்புறுத்துவேன். உன் பெண்டை



சுழற்றி தினம் நோகடிப்பதே என் வேலையாய் இருக்கும். புரிந்து கொள்..!''

சுட்டு விரலைக் காட்டி எச்சரித்துப் பேசியவன் பேசிய அதே வேகத்தில் அகன்றும் விட்டான்.

ரொம்ப நேரம் திக் பிரமை பிடித்தவள் போல் அப்படியே நின்றவள் அக்கா நளினா வந்து தோளைத் தட்டும்போதுதான் உணர்வுக்கு வந்தாள்.

''என்னடி.. பெரும் மயக்கத்தில் இருப்பதுபோல் இருக்கிறாய்? மாப்பிள்ளை உன்னை தனியே கூட்டி வந்து ஏதோ மன்மத ரகசியம் சொன்னது போல் தெரிகிறதே...!''

நளினா கேட்டதும் சட்டென தன் முக வாட்டத்தை மறைத்து சிரித்தவள், ''ஆமாம்... ஆமாம்.. பெரிய மன்மத ரகசியம்தான். சொன்னால் நீ அதிர்ந்துதான் போவாய்..'' எனச் சொல்லி மறுபடியும் நகைக்க முயன்றாள்.

ஆனால் மகேந்திரனின் இறுக்கமான முகமும், அந்த முகம் கன்றிய பேச்சும் அவள் நினைவில் தோன்றி பெரும் அச்சத்தை அவளுள் தோன்ற வைத்தது.



## 10

'நாளை விடிந்தால் கல்யாணம்...' என வீடே ஒரே பரபரப்பாய் கல்யாண களேபரத்தில் திளைத்துக் கொண்டிருந்தது.

அப்பா காலில் சக்கரம் கட்டாத குறையாய்த்தான் நடமாடிக் கொண்டிருந்தார். ''மதிய சாப்பாட்டில் ஜாமும்,

ஐஸ்க்ரீமையும் மெனுவில் கண்டிப்பாய் சேர்த்து விடுங்கள். அப்புறம் பழ வகையறாக்கள், வெற்றிலை, பாக்கு, பீடா சமாச்சாரங்கள் அவரவர் விருப்பம் கேட்டு பரிமாற வேண்டும். ஆட்கள் காணா• விட்டால் கூடுதலாய் ஏற்பாடு பண்ணிக் கொள்ளுங்கள். செலவு பற்றி கவலை வேண்டாம். புரிகிறதல்லவா?'' என கேட்டரிங் காண்ட்ராக்டருக்கு அறிவுறுத்துவதிலிருந்து வீட்டிலிருந்து மண்டபத்துக்குச் செல்ல வேண்டிய சாமான்கள், அதை பாதுகாப்பாய் பார்த்துக் கொள்ள சேலத்து மாமாவிடம் ரூம் சாவியை ஒப்படைப்பது, இடையிடையே அவளிடமும் வந்து, ''என்னம்மா... ஏற்பாடுகள் உனக்கு திருப்தியாய் இருக்கிறதா?'' என விசாரித்தும் பம்பரமாய் சுழன்று கொண்டிருந்தார்.

நளினாவின் கணவர் சண்முகம் அத்தானும் வீட்டு மாப்பிள்ளை என எவ்வித பந்தாவும் இல்லாமல் மூத்த மகன் போல் மாறி அப்பாவிற்கு உதவிக்கரமாய் நடமாடிக் கொண்டிருந்தார்.

அக்கா நளினாதான் விடாமல் அவளையே சுற்றி வந்து, ''உனக்கு அந்த டாப்ஸி கட் முடியலங்காரம் பண்ணி விடுகிறேன். முன்புறம் அப்படியே படிய வைத்து பின்புறம் பூவாய் விரிந்தாற் போல் க்ளிப்பிங்ஸ் வைக்கிறேன். உன் வட்ட பேஸ்கட்டுக்கு அழகாய் இருக்கும். பியூட்டி பார்லர் பெண்மணியிடம் படித்த லேட்டஸ்ட் பேஷன்..'' என அவள் நீளமான கூந்தலை வருடி சொன்ன போது மறுத்தாள் நந்தினி.

''வேண்டாம். சாதாரண பூ அலங்காரமே நன்றாகத்தான் இருக்கும்'' என்றாள்.

''நன்றாக இருக்கும்தான். ஆனால் கண்களை விரித்து விரித்து கொட்டக் கொட்ட உன்னையே பார்க்கும் மாப்



பிள்ளை சாருக்காவாவது இப்படி நீ செய்து கொள்ளலாம் அல்லவா...?''

''ஐயோ விடு நளினா... இதுவே.. போதும்..!''

நந்தினியின் பேச்சில் கொஞ்சம் எரிச்சல் தொனித்தாலும் அதை உணராமல் நளினா சீண்டினாள்.

''புரிகிறது... புரிகிறது.. இந்த அழகுக்கே மாப்பிள்ளை இப்படி மயங்கிக் கிறங்கிக் கிடக்கிறார். இதில் இன்னும் கொஞ்சம் மெருகேற்றி ஜொலிக்க ஆரம்பித்து விட்டால் பின் அவர் கதி என்னாவது.. என்று தானே பயப்படுகிறாய்?''

அடக்க முடியாத சிரிப்புடன் நளினா கேட்க.. ஒப்புக்கு சிரித்தபடி தலை தாழ்த்திக் கொண்டாள் நந்தினி. பாவம்.. நளினா.. மகேந்திரனை இன்னும் இளிச்சவாயன் ரேஞ்சிலே நினைத்துக் கொண்டிருக்கிறாள்... அவள் உண்மை நிலை.. குணம் தெரிந்தால் ஆடித்தான் போய் விடுவாள்..!

நினைத்த நந்தினிக்கு நேரம் விரைய விரைய ஒருவித படபடப்பும் பதட்டமும் அதிகமாகிக் கொண்டுதான் இருந்தது.

இன்னும் ஒரு நாள். அடுத்த இருபத்து நாலு மணி நேரம் கழிந்தால் போதும். அவள் அந்த மகேந்திரனின் மனைவியாகி விடுவாள். அதன் பின் என்ன பாடுபடப் போகிறாளோ?

துணுக்குற்று நினைத்தவள் அதே நினைப்பில் நிமிர்ந்து சிந்தித்துப் பார்த்தாள். அப்படி என்ன நடந்து விட முடியும்? அந்த மகேந்திரன் அவளை அப்படி என்னமாக கொடுமை படுத்திவிட முடியும்?

விறகுக் கட்டை ஒன்று எடுத்து சாத்தும் அளவுக்கு அவன் ஒன்றும் காட்டுமிராண்டி அல்லவே? பின் ஏன் நாம் பயப்பட வேண்டும்?

வேறு என்னதான் செய்வான்? வேறு என்ன..? அவளை வார்த்தைகள் குத்திக் கிழிக்க முடியும். ஊசி குத்துவதைப் போல நடந்ததைச் சொல்லி ரசிக்க முடியும். ஆனால் முக்கியமாய் ஒன்று சொல்லியிருக்கிறானே? எல்லாமே.. அவனுக்கு மட்டும் தெரியும்படி அந்த நாலு சுவற்றுக்குள் தான் செய்வானாம்.. வெளியே ஊர் உலகத்துக்கு மகிழ்ச்சியான ஜோடி போல் காட்டிக் கொள்வானாம்..!

அவன் சொன்னதெல்லாம் ரீவைண்ட் வைத்தது போல் மறுபடியும் மூளையில் ஓட கலவரமாகித்தான் போனாள் அவள்.

இதில் அம்மா வேறு தன் பங்கிற்கு, மாப்பிள்ளை யிடமும், மாப்பிள்ளை வீட்டாரிடமும் பதவிசாக, மனம் கோணாமல் நடந்து கொள்வது பற்றி சின்ன லெக்சரே முந்தின தினம் செய்தாள். எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டு முத்துப் பற்களை இறுக்கமாய் கடித்தவாறு பூம்பூம் மாடு போல் தலையாட்டத்தான் செய்தாள் நந்தினி.

அதைவிட இடையே மண்டபத்தில் ஒருமுறை உற வினர் புடைசூழ வந்த மகேந்திரனும் அவளைப் பார்த்து சலனமில்லாத ஒரு பார்வை பார்த்துச் சென்றான். அந்தப் பார்வையின் அர்த்தம்தான் என்னவோ? என அவள் திகைக்கத்தான் செய்தாள்.

இதில் இன்னொரு விஷயம் தெரிந்து பிறகுதான் நந்தினி வீட்டாரை அதிர்ச்சியடையச் செய்தது. நளினா



தான் முதலில் கவனித்து பதைத்துப் போனவளாய் நந்தினி பக்கம் வந்தாள்.

''நந்தினி, மாப்பிள்ளையின் மாமா என்று சொல்லிக் கொண்டு அலையும் அந்த சில்க் ஜிப்பா கிருதா மீசையை எங்கோ பார்த்தாற் போல் தெரிகிறதே. உனக்கு ஞாபகம் வருகிறதா?'' என்றாள்.

நந்தினிக்கு அவரைப் பார்த்ததும் நன்றாகப் புரிந்து கொண்டாள். கிரிதரோடு ஏற்பட்ட கல்யாணப் பேச்சில் எல்லாவற்றையும் முன் நின்று பேசி நடத்தியவர் அவர் தான். கடைசியில் கல்யாணத்தை நிறுத்திய போதும் பெரிதாய் வந்து தாம் தீம்மென குதித்தவரும் அவர்தான். அவரை மறக்க முடியுமா?

இருந்தாலும் அக்கா நளினா முன் அழுதுக் காட்டிக் கொள்ள விரும்பாதவளாய் ''யாரைச் சொல்கிறாய்..? அவரா? யாரென்று தெரியவில்லையே! நீ தவறாகச் சொல்கிறாய். அவர் இவ்வளவு நாளாய் துபாயில் இருந்து விட்டு இப்போதுதான் திரும்பியிருக்கிறார்.. என்று கேள்விப் பட்டேன்...'' என்று சமாளிக்க நளினாவும் அத்தோடு விட்டு விட்டாள்.

மேலும் இந்த கிரிதர் விஷயத்தில் நல்லவேளையாய் அந்த மாமாவைத் தவிர வேறு யாரையும் பார்த்ததாய் நந்தினிக்குக் கூட ஞாபகம் இல்லை. ஏன்... இந்த மகேந்திரன் கூட அச்சமயத்தில் தலைகாட்டவில்லையே! அப்படி ஒருவேளை அவன் தென்பட்டிருந்தால்.. அவள் சுதாரித்திருப்பாளே?

எல்லாமே அந்த சில்க் ஜிப்பா மாமா மூலம் பேசப் பட்டு.. அவரிடமே கிரிதரோடு ஏற்பட்ட கல்யாணத்தை

நிறுத்தப் போவதாய் சொன்னதால்... அவரைத் தவிர மற்ற குடும்ப உறுப்பினர்களை அறிய முடியாமல் போயிற்று.

அதனாலே இந்த மகேந்திரன் சிலந்தி போல் வலை பின்னி அவளை வகையாய் சிக்க வைக்க காத்திருக்கிறான்.

அவளும் முன்பின் யோசியாமல் தனக்காக இப்படியொருவன் வழிகிறானே என்ற நினைப்பில் தலையாட்டி விட்டாளே!

அப்பாவி போல் லூசுத்தனமான இளிச்சவாயன் போல் எப்படியெல்லாம் நடித்திருக்கிறான் இன்டர்வியூவில் அசடு வழிவதில் ஆரம்பித்து வீட்டில் வந்து பெண் கேட்பது வரை கச்சிதமாய் செய்திருக்கிறானே!

இதற்கே இந்த நடிப்பு என்றால் பழி வாங்கத் துடிக்கும் இவனது நிஜ உருவம் எப்படி இருக்கும்? துணிந்து இவனுக்கு கழுத்தை நீட்டப் போகும் தனக்கு என்ன ஆபத்து வருமோ?

முதன் முறையாய் தன் நிலை குறித்து கவலை கொள்ளலானாள் நந்தினி.

## 11

கதைகளில் சொல்வது போல் மறுநாள் காலை பொல பொலவென விடிந்தது. நந்தினி ரொம்ப நேரம் விழித்து தான் இருந்தாள். அடிக்கடி அம்மாவோ நளினாவோ அவள் தூங்கி விட்டாளா என அறையில் வந்து பார்ப்பதை



உணர்ந்து தூங்குவது போல பாசாங்கு செய்ய வேண்டியதாயிற்று.

அவள் குளித்து முடிந்ததும் தடபுடலாய் மணப்பெண் அலங்காரம் ஆரம்பமாயிற்று. தங்க நிற ஜரிகையில் கிளிப் பச்சை வண்ண பட்டுப் புடவை. அந்த இருபதாயிர ரூபாய் புடவையை நளினாவும் சித்தப்பா மகள் உதயாவும் தான் நகரின் பெரிய ஜவுளிக் கடையில் பார்த்துப் பார்த்து எடுத்தார்கள்.

'உன் அழகுக்கு ஏற்ற புடவை..' என அவள் கட்டியதும் அம்மாவே அதிசயித்துக் கூறினாள். ஒப்பனைகள், பூ அலங்காரங்கள் முடிந்ததும் நந்தினியே ஒரு கணம் தன்னை கண்ணாடியில் பார்த்தவள் வியக்கத்தான் செய்தாள்.

என்ன இருந்தாலும் ஒரு பெண்ணிற்கு அழகு சேர்ப்பது அவள் வாழ்க்கையின் பொன்னான தருணமான மணப்பெண் கோலம்தான் என நினைத்தாள். சர்வ அலங்காரங்களுடன் அழகாக அசைந்து வரும் தேர் போலத்தான் அவளது ஒப்பனையும் இருந்தது.

தலை சாய்த்து தனது வில் போன்ற புருவங்களையும் மை விழிக் கண்களையும் இமைக்காமல் பார்த்தவளுக்கு மகேந்திரன் இனி இந்த வீச்சுக்களையெல்லாம் பார்க்க மாட்டான் என்பது உரைத்து சங்கடப்படுத்தியது.

ஆனால் அதற்கு மேல் அவளை விழி பார்த்து உட்காரவோ சிந்திக்கவோ யாரும் விடவில்லை. வரிசையாய் கல்யாணச் சடங்குகள் ஆரம்பமாகி விட்டன. அவளைக் கைப்பாவை போலத்தான் சுற்றத்தார் கூட்டம் அழைத்துச் சென்றது. கூட்டி வந்தது உட்கார வைத்தது.

யார் யாரோ பேசினார்கள். ஒரு கை அவள் நெற்றிச் சுட்டியை சரி செய்தது. இன்னொரு கை கழுத்து மாலை இறுக்கத்தை தளர்த்தியது. மற்றொரு கை கர்ச்சீப் கொண்டு வியர்வைத் துளிகளை ஒற்றியெடுத்தது.

அவள் அப்படியே சிலையாய் சொன்னதைச் செய்யும் கிளிப்பிள்ளை போலத்தான் அமர்ந்திருந்தாள். யாரையும் பார்க்கவும் இல்லை. குனிந்த தலையை நிமிர்த்தவும் இல்லை.

அவள் தலை நிமிர்ந்தது பக்கத்தில் பட்டுச் சட்டை பட்டு வேஷ்டி பளபளப்பில் மகேந்திரன் மாப்பிள்ளை கோலத்தில் உட்கார்ந்த போதுதான்.

நிமிர்ந்தவள் மெல்ல கண்கள் தாழத்தான் ஒரு பார்வை பார்த்தாள். அவள் பார்க்கும் சமயமாய், மகேந்திரன் யாா் யாரையோ பார்த்து சிரித்து கைகளை அசைத்துக் கொண் டிருந்தவன் தற்செயலாய் அவளது பார்வையை சந்தித் தான்.

அவன் முகம் மாறியது. சிரிப்பை சட்டென நிறுத்தி முகம் இறுகுவதைப் போல மாறுவதைக் கண்டவள் சட்டென பார்வையைத் தாழ்த்தி குனிந்து கொண்டாள்.

அப்படிக் குனிந்தவள் குனிந்தது தான்.. அவன் தாலி கட்டி மூன்று முடிச்சு போடும் வரை நிமிரவே இல்லை. அக்கா நளினாவும், பள்ளி காலத் தோழி நீலாவும் தான் அடிக்கடி அவள் காதுகளில் குனிந்து, ''என்னடி புதியதாய் வெட்கம்? சற்றே நிமிர்ந்து பார்.. அப்போதுதான் வீடியோ வில் நன்றாக விழும்...'' என்று அறிவுறுத்திய போதும் தலையாட்டினாள் தவிர நிமிரவில்லை.



அதற்குப் பின் வந்த சடங்குகளின் போதும் அவனது நேர் பார்வையை தவிர்த்து பக்க வாட்டில் கண்களைப் பதித்து சமாளித்தாள். அந்த மகேந்திரனின் இறுகிய முகம் தன்னை மேலும் கலவரப்படுத்தக் கூடும் என உள்ளூர பயந்தாள்.

சடங்குகள் ஒவ்வொன்றாய் முடிந்து இரவும் வந்தது. முதலிரவு. முன்பு போல் இல்லாமல் நழுவ முடியாமல் நேருக்கு நேர் அவள் சந்தித்தாக வேண்டிய கட்டாயம். சூழ்நிலை.

இனியும் பின் வாங்கக் கூடாது என தைரியம் கொண்ட வளாய் வீண் சிந்தனைகளைத் தவிர்த்து பால் சொம்புடன் ரூமினுள் பவ்யமாய் நுழைந்தாள்.

அவள் வருகைக்காக காத்திருப்பவன் போல் குறுக்கும் நெடுக்குமாய் வேகமாய் நடந்து கொண்டிருந்தான் மகேந் திரன்.

அதிராமல் நடந்தவள் நிமிர்ந்து மெல்ல அவனது முகத்தைப் பார்த்தவள் அப்படியே அதிரத்தான் செய்தாள்.

கோபம் ஆக்ரோஷம் பொங்கும் ஒரு வித கொப்பளிக்கும் உணர்ச்சியோடு முகமா அது? அவளறிந்து யாரும் அவள் மீது இதுவரை இப்படியொரு கோபத்தை காட்டியதும் இல்லையே!

தன்னையே விழிகள் விரிய திகைத்துப் பார்த்தவள் முன் நடந்து பக்கம் வந்தவன் அதே இறுக்கத்தோடு கைகளையும் கட்டிக் கொண்டான்.

''சரியான கல்லுளி மங்கினி.. நீ... நான் இவ்வளவு சொல்லியும் கல்யாணத்தை நிறுத்தாமல் என்னை கட்டிக் கொன்டிருக்கிறாய்.. என்ன ஒரு நெஞ்சழுத்தம் உனக்கு?''

அவன் கேள்விக்கு பதில் சொல்லாமல் தலையை தாழ வைத்தாள்.

அவன் விடவில்லை.

விறுவிறுவென அவள் பக்கம் வந்து, அவள் முகத்தை தன் கரங்களால் படக்கென நிமிர்த்தினான்.

கண்களை நேருக்கு நேராய் சந்தித்து விழிகளை உருட்டினான்.

''இந்தக் குனிகிற பாசாங்கு வேலையெல்லாம் என்னிடம் வேண்டாம். உன் போலித்தனம் எனக்குத் தெரியும். நான் கேட்கிற கேள்விகளுக்கு பதில் சொல்...''

அதிகாரமாய் அவன் குரல் ஒலித்தபோது அதற்கு மேலும் அமைதி காக்க முடியாதவளாய் அவள் நிமிர்ந்து கொண்டாள்.

''சொல்கிறேன்...'' என்றாள்.

''இவ்வளவு சொல்லியும் ஏன் கல்யாணத்தை நிறுத்த வில்லை. உன் சுயநலம் தானே?''

''இல்லை.. நீங்கள் நினைப்பது போல் இல்லை..''

''வேறு என்ன அது?''

''தெரிந்தோ தெரியாமலோ உங்கள் சகோதரரின் முடிவுக்கு நாங்கள் காரணமாகி விட்டோம். அந்த தவறுக்கு பிராயச்சித்தம் போல் நீங்கள் கொடுக்கும் தண்டனையை ஏற்றுக் கொள்ள நான் முடிவு செய்தேன். மனப் பூர்வமாகவே உங்களுக்கு கழுத்தை நீட்டினேன்...''

அவள் சொல்லச் சொல்ல அவன் அதை நம்ப முடியாதவன் போல், மறுப்பான தலையசைப்புடன் அவளையே சுற்றி வந்தான். மேலும் கீழும் அவளையே பார்த்தான்.



''என்ன சொன்னாய் மனப் பூர்வமாகவா? அப்படியானால் மனம் என்ற ஒன்று உனக்கெல்லாம் இருக்கிறதா.. இதெல்லாம் சாத்தான் வேதம் ஓதுகிற கதையாகத்தான் தெரிகிறது.. ம்ம்... சரி, உன்னிடம் என்ன வெட்டிப் பேச்சு? அதான் பலியாடு போல் என்னிடம் வந்து விட்டாயே.. உனக்கான தண்டனையை இந்த இரவில் இந்த நிமிடம் முதல் ஆரம்பித்து விடட்டுமா?''

கர்ஜனையாய் பேசி அவன் ஆக்ரோஷமாய் சிரித்த போது புலியிடம் சிக்கிய புள்ளி மான் போல் அவள் உடம்பே நடுங்கியது. பற்களை அழுந்தக் கடித்து நடுக்கத்தை நிறுத்தியவள் நிமிர்ந்து எவ்வித சலனமுமில்லாது அவனைப் பார்த்தாள்.

அவன் பார்வையை கூர்மையாக்கியபடி அவள் பக்கம் வந்தான். மறுபடியும் மேலிருந்து கீழ் வரை அவளது உடம்பை ஊடுருவினான்.

''இந்த அழகை... உலக மகாரதி போன்ற நினைப்பை வைத்துக் கொண்டுதானே.. என்னை மயக்கப் பார்த்தாய்? நான் மயங்குவது போல் நினைத்தாய்?''

சொல்லியபடி தனது ஆள்காட்டி விரலை நீட்டி அவள் முகத்திலிருந்து கழுத்து வரை கோடு போல் வருடியவன் மறு நிமிடமே அவள் சற்றும் எதிர்பாராத அந்தச் செய்கையை செய்தான்.

சட்டென அவள் தன் பக்கம் அப்படியே வாரி இறுகக் கட்டினான். நெஞ்சாரத் தழுவி அதே வேகத்தில் அவள் உதடுகளில் அழுந்த முத்தமிட்டான்.

அவன் பிடி இரும்புப் பிடியாக இருந்தது. அந்தப் பிடிக்குள் கோழிக் குஞ்சாய்த்தான் அழுந்த சிறைப்பட்டிருந்தாள் அவள்.

அவன் பிடியிலிருந்து திமிறவோ விலகவோ முயற்சிக்காமல் அவள் அப்படியே இருக்க.. அந்த இறுக்கமான மோக நிலையில் மேலும் சில வினாடிகள் அவளைக் கட்டியணைத்து ரசித்தவன் சட்டென அதே வேகத்தில் அவளை விடுவித்து விலகினான்.

குனிந்து அவள் முகத்தை கண்களை ஊடுருவினான். ''என்ன சொக்கிப் போய் விட்டாயா? உணர்ச்சிகளில் அப்படியே கொந்தளித்து தவித்திருப்பாயே..? இதுதான் எனக்கு வேண்டும். இந்த விஷயத்தில் மட்டுமல்ல.. எல்லா விஷயத்திலும் உன்னை தவிக்க வைக்க வேண்டும். அதுதான் என்னுடைய பிளான்..!'' என்றான் அமைதியாக.

நந்தினிக்கு எல்லாம் புரிந்தது.

அவள் எந்தவொரு வார்த்தையையும் பேசிவிடக் கூடாது என்பது போல் இறுக்கமாய்த்தான் இருந்தாள்.

அதன் பிறகு விடுவிடுவென்று படுக்கையை நோக்கி நடந்தவன் சட்டென அதில் உட்கார்ந்து ஸ்டைலாய் கால் மேல் கால் போட்டுக் கொண்டான்.

நிதானமாய் பாக்கெட்டுகளில் துழாவி அதை வெளியெடுத்தான்.

சிகரெட்!

அவள் பார்க்கும்போதே அதை உதடுகளில் பொருத்தி லைட்டரால் உயிரூட்டினான்.

என்ன சிகரெட் பழக்கம் உண்டோ இவனுக்கு?

அவள் திகைக்கும்போதே அவள் காதுகளில் அவன் அலட்சிய வார்த்தைகள் ரீங்காரமிட்டன.



''என்ன பார்க்கிறாய்? சிகரெட் மட்டுமல்ல. மது, மாது என அத்தனையையும் எனது அன்றாட டைம் டேபிளில் உண்டு..!'' என்றான் அவளை மேலும் அதிர வைத்தவாறு.

# 12

நந்தினி எவ்வளவு நேரம் அப்படி தலையணையில் கண்கள் வெறிக்கப் படுத்திருந்தாள் என்று தெரியாது. அவளுக்கு உணர்வு வந்து தன் நிலை உணர்ந்து அவள் எழுந்தபோது நன்கு விடிந்திருந்தது.

நிமிர்ந்து கட்டில் பக்கம் பார்த்தாள். அவனைக் காணவில்லை. இரவில் அவளை நோக்கி தலையணையை தூக்கிப் போட்டு விட்டு, 'குட் நைட்!' என அவன் திரும்பிக் கொண்டதும், கீழே தரையின் கார்ப்பெட்டிலே அவள் படுத்துக் கொண்டதும் ஞாபகத்திற்கு வந்தது.

சட்டென உடம்பு மேல் கிடந்த உல்லன் போர்வையை வியப்புடன் நோக்கியவள், இது எப்படி? என திகைத்தாள்.

தனக்கு குளிர்கிறது. என அவனா போர்த்தி விட்டான்...? நம்ப முடியாமல் சுற்றும் முற்றும் பார்த்தாள். அவர்கள் இருவரையும் தவிர வேறு யாரும் அங்கு வர வாய்ப்பில்லை.

பாத்ரூம் கதவைத் திறந்து கொண்டு பூத்துவாலை டவலுடன் வெளிப்பட்டவன் அவள் தன் மேல் கிடக்கும் போர்வையை பார்ப்பது கண்டு அவள் நினைப்பையும் புரிந்து கொண்டான்.

''என்ன பார்க்கிறாய்..? குளிரில் நடுங்கிய உனக்கு நான்தான் போர்த்தி விட்டேன்..'' என்றவன் ஒரு கணம் நிறுத்தி கண்களை இடுக்கினான், ''அதற்காக ஒரேயடியாய் கற்பனைச் சிறகுகளை விரித்து விடாதே... இது... மூன்றாம் நபர் மீது காட்டும் பரிதாபம்தான்!''

இந்த குத்தல் பேச்சுக்கு போர்த்தாமலே இருந்திருக்கலாம் என உள்ளூர எண்ணிய அவள் ஒன்றும் பேசாமல் எழுந்து உடைகளைச் சரி செய்து கிளம்பப் போனாள்.

''நில்... ஒரு விஷயம் சொல்ல வேண்டும்.''

என்ன? என்பது போல் பார்த்தாள்.

''நம் சண்டை.. எனது பழிவாங்கல் இந்த நாலு சுவருக்குள்தான்.. வெளியே.. வெளியுலகத்திற்கு நாம் அன்பான அந்நியோன்னியமான கணவன் மனைவி. அப்படித்தான் நடந்து கொள்ள வேண்டும் புரிகிறதா?''

அவள் வெறும் தலையை மட்டும் அசைக்க அதில் எரிச்சல் அடைந்தவனாய், ''வாயைத் திறந்து பதில் சொல்...'' என்றான்.

''புரிகிறது...'' என்றாள்.

''அப்படியே இன்னொன்றையும் புரிந்து கொள்.''

அவள் புரியாமல் திரும்பி அவனையேப் பார்க்க அவன் கைகளை வீசியபடி அவள் பக்கம் வந்தான்.

''கல்யாணம் முடிந்த கையோடு இரண்டே நாளில் தனிக் குடித்தனம் போகிறோம் எனது லயன்ஸ் டவுண் பங்களா அதற்காக தயாராகி விட்டது..''

அவன் சொல்லச் சொல்ல அவளுக்கு எல்லாமே அவன் திட்டமிட்டே செய்கிறான் என்பது புரிந்தது.



எதற்காக இப்படியெல்லாம் செய்கிறான்? இப்படியெல்லாம் நடந்து அவளைப் பழி வாங்கி அப்படி அவனுக்கு என்னதான் கிடைக்கப் போகறிது? என வியக்கவும் செய்தாள்.

அவன் அதற்குள் பேசி முடித்திருக்க அவன் மீண்டும் மெல்ல அகலப் போனாள்.

''ஒரு நிமிடம் நில்...'' என்றான் திரும்பவும்.

புரியாமல் சிலை போல் நின்றவள் அவனையே வெறித்தாள்.

''என்ன விஷயம் தெரியுமா?'' என பீடிகையுடன் ஆரம்பித்தவன், ''உன்னை ஏதாவது செய்து எரிச்சல் படுத்த வேண்டும் போல் இருக்கிறது. என்ன செய்ய? எப்படிச் செய்தால் எரிச்சல் படுவாய்?'' என அவளிடமே கேட்டான்.

அவள் பார்வையில் முறைப்பு கூடியது.

அதை ரசித்தவன் போல் அவளை இன்னும் நெருங்கியவன் படக்கென அவளது கன்னங்களில் தனது உதடுகளை ஒற்றியெடுத்தான்.

''இப்போதைக்கு இது.. உனக்கு எரிச்சலை ஏற்படுத்தும்.. என நினைக்கிறேன்..!'' என்று அவன் முணுமுணுத்தது அவன் முத்தமிட்டதை விட அதிக ஆத்திரத்தை அவளுள் ஏற்படுத்தியது.

அதே எரிச்சலுடனே அன்று பொருள்களை பாக்கிங் செய்வதில் கவனமாய் இருந்தாள்.

அக்கா நளினா கூட, ''நந்து, நீ கொடுத்து வைத்தவள் தான். என்னைப் போல் பிக்கல் பிடுங்கல் என மாமியார்

தொந்தரவு உனக்குக் கிடையாது. எடுத்ததும் தனிக் குடித்தனம்தான். அதில் மாப்பிள்ளை வேறு உன் காலடியே சரணம் என சரணாகதி கிடப்பதால் நிஜமாகவே நீ பாக்கியசாலிதான்!'' என்றாள்.

ஒரு வழியாய் இரண்டு மூன்று நாட்களில் எல்லா பேக்கிங்களும் முடிந்து மகேந்திரனின் லயன்ஸ் டவுண் பங்களாவில் தனிக் குடித்தனத்திற்கு ஏற்பாடு ஆயிற்று.

நல்ல முகூர்த்த நேரத்தில் பால் காய்ச்சி தம்பதிகளாய் குடி பெயர்ந்தார்கள். பங்களாவின் விஸ்தாரத்தையும் மேன்மையையும் பார்த்த நந்தினி அதிரத்தான் செய்தாள்.

உயர் ரக சோபாக்கள், சாண்ட்லியர் விளக்குகள், குளிரூட்டப்பட்ட பெரிய பெரிய அறைகள், சுத்தமான காற்றோட்டமுள்ள முன்புற புல்வெளி என நந்தினி எதிர்பார்த்த எல்லாமே அமைந்திருந்தது.

போதாக்குறைக்கு முன்புற பின்புறம் தோட்டம் போல் அரை ஏக்கர் பரப்பளவில் பல வகை மரங்கள் வித விதமான செடிகள்.

அவற்றின் நடுவே உட்கார்ந்தால் மெய்மறந்து நேரம் போவதே தெரியாமல் உட்கார்ந்திருக்கலாம் என நந்தினிக் குத் தோன்றியது.

அதிலும் பின்புற பெரிய மரங்களின் கிளைகளில் கீச்சு கீச்சு என எப்போதும் குருவிகளின் சப்தம். ஓயாத இனிமை ஓசை.

அவை தங்களது சின்னஞ்சிறு அலகுகளால் ஒன்றை யொன்று நெருங்கி அலகால் உரசி, சண்டையிட்டு விரட்டிக் கொண்டு பறந்து... அவைகள் பண்ணும் சேஷ்டைகளை உற்சாகமாய் ரசித்தாள்.



பொதுவாய் அந்த புது வீட்டுச் சூழ்நிலை அவளுக்கு ரொம்பவும் பிடித்துப் போக மகேந்திரனின் தண்டனை விஷயத்தை மறந்து அன்று முழுவதும் உற்சாகமாய் நடமாடினாள்.

அந்த சந்தோஷத்திலே அப்பா, அம்மா, அக்கா எல் லோருக்கும் புன்னகை முகமாய் விடை கொடுத்து அனுப்பியும் வைத்தாள்.

ஆனால் மறுநாள் முதல் மகேந்திரன் நடந்து கொண்ட விதம் கண்டு அவளால் அதிராமல் இருக்க முடிய வில்லை.

## 13

மறுநாள் வழக்கம் போல் மகேந்திரன் அலுவலகம் கிளம்பிச் சென்றதும் தான், தான் திக்குத் தெரியாத காட்டில் தனித்து விடப்பட்டது போல் உணர்ந்தாள்.

அறையிலிருந்து வெளி வந்து பங்களா முழுக்க சுற்றிப் பார்த்து விட்டாள். ஒன்றிரண்டு பணியாளர்களையும் அவளையும் தவிர யாரும் அங்கு இல்லை. மகேந்திரன் எப்போதும் தனிமை விரும்பி. தானே தனித்து உழைத்து வாழ்க்கையில் முன்னேறியவன்.

அதனாலோ என்னவோ எடுத்தெறிந்து பேசுவதும், சுயமாய் தானே முடிவெடுப்பதும் அவனது குணமாய் ஆகி விட்டதோ என நினைத்தாள்.

தன்னிச்சையாய் கழுத்தில் தொங்கிக் கொண்டிருந்த தாலிச்சரடை உற்றுப் பார்த்தாள். அவள் விரல்கள் மெல்ல அதை வருடியது.

ஒரு கணம் அவன் அதை கட்டிய நோக்கம் ஞாபகம் வந்து அவளுக்கு பயத்தையும் கொடுத்தது. அவளுக்கு தண்டனை கொடுத்து தண்டிப்பதற்காக யாராவது இப்படித் தாலி கட்டுவார்களா?

ஆனால் மகேந்திரன் கட்டியிருக்கிறானே? தினம் தினம் அவளை சித்ரவதை செய்து பழி தீர்த்துக் கொள்ளப் போவதாய் சொல்லியிருக்கிறானே?

நாம் அவசரப்பட்டு விட்டோமோ..? கண்களைத் திறந்து கொண்டே குழியில் விழுந்து விட்டோமோ? கல்யாணத்திற்கு சம்மதித்திருக்கக் கூடாதோ? என்றெல்லாம் தீவிரமாய் நினைத்தாள்.

பின் யோசித்தவள் சட்டென பின்னோக்கிச் சென்ற மனநிலையை அப்படியே நிறுத்தினாள். சில நேரங்களில் இப்படி அதிகம் சிந்தித்தல் கூடாது. சிந்திப்பதே, பெரும் தண்டனையாய் போய் விடும். எதையும் பொருட்படுத்தாத நடப்பதை ஏற்றுக் கொள்ளும் பக்குவமான மனநிலைக்கு மனதை கொண்டு வர வேண்டும். வீறு கொண்டவள் போல் உறுதியெடுத்து நிமிர்ந்து கொண்டாள்.

என்ன இருந்தாலும் அவள் தாலி கட்டிய அவன் மனைவி தானே? அவன் அவளை மனைவியாய் அங்கீகரிக்கா விட்டாலும் அவனது நிழலில் மனைவி மாதிரியாக நினைத்துக் கொண்டாவதாவது வாழ வேண்டியது தான்! அவள் செய்த தவறுக்கு அவளே விரும்பி ஏற்றுக் கொண்ட சூழ்நிலை!



இதற்கு.. ஏன் வருந்த வேண்டும்? நினைத்து நினைத்து கவலைப்பட வேண்டும்?

ஆனால் அவள் தைரியமான நினைப்பிற்கு சோதனையாய் அன்று மகேந்திரனின் நடவடிக்கையும் புதிராயிருந்தது. மதிய உணவிற்காக வீட்டிற்கு வருபவன் அன்று வரவில்லை. மாலை வருவானென்று பார்த்தால் அப்போதும் வரவில்லை.

இரவு ஏழு மணியைத் தாண்டியதும் நந்தினியால் பொறுக்க முடியவில்லை. எவ்வளவு நேரம் தான் இப்படி தனிமையில் வாடுவாள்? இருக்கை ஒன்றை எடுத்துப் போட்டுக் கொண்டு பங்களா வாசலிலே உட்கார்ந்து விட்டாள்.

கண்கள் பூக்க சிலை போல் காத்திருந்தவள் அப்படியே ரொம்ப நேரம் தன்னை மறந்திருந்தாள். திடீரென காரின் ஹாரன் ஒலி கேட்டு உணர்வுக்கு வந்தபோது மணி இரவு பத்து.

வந்தது மகேந்திரனின் கார்தான்!

காரிலிருந்து கதவைத் திறந்து ஒருவித தள்ளாட்டத்துடன் இறங்கி வரும் மகேந்திரனைக் கண்டு அப்படியே திடுக்கிட்டு விட்டாள்.

என்ன... குடிப்பழக்கம் உண்டு என்று சொன்னானே...? அதை நிஜம் என்று நிரூபித்துக் காட்ட குடித்திருக்கிறானா?

அதே நடையில் தள்ளாடியபடி வந்தவன் அவள் பக்கம் வந்ததும் சட்டென நின்றான்.

அவனது சிவந்து போன விழிகள் அவளை உற்றுப் பார்த்தது.

''என்ன.. காத்திருக்கிறாயா? புது மணப்பெண் போல முதலிரவை எதிர்பார்த்து காத்திருக்கிறாயா?''

குதர்க்கமாய் அவன் அப்படிக் கேட்டதும் சாட்டையால் அடித்தது போல் அவள் துடித்து விட்டாள்.

என்ன ஒரு கேள்வி! குடி போதையில் கண்கள் சொருக வந்தாலும் அவனது கோபம்.. வார்த்தைகளால் குத்திக் கிழிக்கும் குரூரம் இருக்கிறதே! அவளை அப்படி ரணமாக்கிப் பார்ப்பதில் தானே அவனுக்கு திருப்தி.

தள்ளாடியபடி முன் படியேறியவன் பாலன்ஸ் தவறி விழப் போக சட்டென ஓடிப்போய் பிடிக்க முயன்றாள்.

அதற்கும் கைகளை உயர்த்தி, ''என்னைத் தொடாதே...'' என்று சொல்லியபடி பக்கவாட்டுச் சுவரைப் பிடித்துக் கொண்டான்.

பின் அவளை ஒரு பொருட்டாய் கூட மதிக்காமல் தன் ரூமிற்கு விறுவிறுவென சென்றவன் படீரென கதவையும் சாத்திக் கொண்டான்.

நந்தினி பிரமை பிடித்தாற் போல் அந்த மரக் கதவையே வெறித்தபடி ரொம்ப நேரம் நின்றிருந்தாள்.

அவள் மனதை அந்த விஷயம் உறுத்தியது. முன்பு காதலிப்பது போல் நடித்தபோது இந்த மகேந்திரனின் முகம் எவ்வளவு சாந்தமாய்.. தவழும் அமைதியுடன் இருந்தது? ஆனால் இப்போது..?

முகத்தில் ஒரு வண்டி வன்மம் வைத்துக் கொண்டு.. கடித்துக் குதறும் புலி போல் வெறியாய் அலைந்து கொண்டு அல்லவா இவன் இருக்கிறான்? இவனை எப்படி மாற்றுவது? இதில் அவளை துன்பப்படுத்துவதாய் நினைத்து குடிப்பழக்கத்தை வேறு ஆரம்பித்திருக் கிறானா? அதை எப்படி நிறுத்துவது?



அவளது கேள்விக்கான பதிலை அவனே மறுநாள் காலை உணவிற்காக டைனிங் டேபிளில் உட்கார்ந்த போது தெளிவுபடுத்தினான்.

''நேற்று மனம் சரியில்லை. அதான் குடித்து விட்டேன். நான் ஒன்றும் மொடாக் குடிகாரன் இல்லை. அதைப் புரிந்து கொள்.'' என்றபடி சமாளித்துப் பேசியவன் டக்கென அவளது முகத்தையே உற்றுப் பார்த்தான்.

''ஆமாம்.. கேட்க மறந்து விட்டேன். நேற்று இரவு.. ஏன் அப்படிச் சீவிச் சிங்காரித்துக் கொண்டு எனக்காக காத்திருந்தாய். காத்திருந்தாய்தானே?''

நந்தினி பேசாமல் இருக்கவும் மெல்ல எழுந்து அவள் பக்கம் வந்தான்.

''உன்னிடம் தான் கேட்கிறேன் பதில் சொல்...'' என்றான்.

நந்தினி அதற்கும் பேசாமலிருக்க, ''என் கேள்விகளுக்கு பதில் சொல்வது உனக்கு நல்லது...'' என்றான் மிரட்டலாக. அவள் சட்டென நிமிர்ந்து அவனை முறைத்தாள்.

''உங்கள் கேள்வி இருக்கட்டும் முதலில் என் கேள்விகளுக்கு பதில் சொல்கிறீர்களா?''

''கேள்வியா..? நீயா..? கேள்..!'' என்றான் அதே அதிகார தோரணையில் அவளையே ஒரு மாதிரியாய் பார்த்தபடி.

''என்னை பழி வாங்குவதாய் நினைத்துக் கொண்டு... குடிப் பழக்கத்திற்கு அடிமையாகி உங்களை நீங்களே அழித்துக் கொண்டு... தண்டித்துக் கொண்டு...?''

அவள் வார்த்தைகளை முடிப்பதற்குள் படபடவென சிரிக்க ஆரம்பித்தான்.

''முட்டாள்.. நீ சரியான முட்டாள்..!'' என்றான். பின் எதுவும் பேசாமல் விறுவிறுவென எழுந்து சென்று விட்டான்.

## 14

மறுநாள் இன்னொரு கூத்தாய் படுக்கையறையில் பெரிய சைஸ் கிரிதரின் போட்டோ ஒன்றை மாட்டினான்.

அது அவளுக்காகவாம். அவளுக்கு அதைப் பார்க்கும் போதெல்லாம் மனம் உறுத்த வேண்டுமாம். கிரிதரின் உயிர் போனதற்கு தாங்கள்தான் காரணம் என அவள் வேதனைப்பட வேண்டுமாம்.

அவன் சொன்னபோது ஒன்றும் பதில் பேசாமல் இருந்து விட்டாள் நந்தினி.

அன்று இரவு படுக்க வந்தவன் அவள் தோள்களைப் பிடித்து அழுந்தத் திருப்பினான்.

''இப்படி.. என்னைப் பார்..'' என்றான்.

நந்தினியும் கண்கள் அகல விரித்து அவனைப் பார்த்தாள்.

''என்னைப் பிடித்திருக்கிறதா?''

அவள் பதில் சொல்லாமல் இருந்தாள்.



''உன்னைத்தான் கேட்கிறேன். என்னைப் பிடித்திருக் கிறதா?''

''ம்...'' என்றாள் லேசான தலையசைப்புடன்.

''இவ்வளவு செய்தும் என்னைப் பிடித்திருக்கிறதா? உனக்கு வெறுப்பு வரவில்லையா?''

அவனது கேள்வி அவளை ஊமையாக்கியது. உண்மையில் அவன் மீது ஆசை இருக்கிறதா? என அவளுக்குள்ளே கேட்டுப் பார்த்தாள். இந்தப் பழி வாங்குகிறேன் என்ற குரங்குத்தனம் இல்லா விட்டால்.. இந்த கம்பீரமும்.. ஆண்மை பொங்கும் அவனது அழகும் ரசிக்கக் கூடியது தானே..? இதை ஏன் இவன் புரிந்து கொள்ள மறுக்கிறான்?

அவள் யோசிக்க அவன் மறுபடி அவள் முகம் முன் சொடுக்கிட்டான்.

''என் மீது வெறுப்பு வரும்படி இதுவரை நான் நடந்து கொள்ளவில்லை. அப்படித்தானே?''

அவள் மறுபடியும் பேசாமல் இருக்க அவனது பார்வையில் முறைப்பு கூடியது.

''நான் ஒரு மடையன். இவ்வளவு நாள் உன்னை சும்மா விட்டு வைத்திருக்கிறேனே..?'' என்றபடி அவனது பார்வை அவளது மேனியை மேலிருந்து கீழ்வரை மேய்ந்த போது அவளுள் லேசான நடுக்கம் பரவியது.

அவள் பயந்தது போலவே அவன் பக்கத்தில் வந்தான். அவள் மலர்கரங்களை தொட்டான். மெல்லிய நடுக்கத் தோடு விலகப் போனவளை இழுத்துப் பிடித்தான்.

அவனது விரல்கள் முன்னேறி அவளது தோள்களையும் வளைவான இடுப்பையும் ஒருசேரப் பிடித்தன.

அவள் சற்றும் எதிர்பார்க்காத அந்த சமயத்தில் அவளை இறுக்கமாய் அணைத்தான்.

அவனது முரட்டுத்தனமான இறுக்கமான உடல் முழுவதும் தழுவிய அணைப்பு அவளை திடுக்கிடச் செய்தது. நிமிர்ந்து அவனது முகத்தைப் பார்த்தபோது அவன் கண்களில் புதியதாய் அந்த வெறி!

இதுவரை அவனிடம் பார்த்திராத அந்த வெறி அவளைக் கலவரப்படுத்த அப்படியே கண்களை மூடிக் கொண்டாள்.

அவள் அப்படி கண்களை மூடிக் கொண்டதை தனக்கு சாதகமாய் நினைத்துக் கொண்டவன் அவள் மேல் படர்ந்து மூர்க்கத்தனத்துடன் செயல்பட ஆரம்பித்து விட்டான்.

காணாததைக் கண்டது போல் பாய்ந்து முத்தமிட்டு அவளது அவ்வளவு அழகையும் ஒரே இரவில் அனுபவித்து விட வேண்டும் போல் அவன் வெறியாய் செயல்பட்டது கண்டு மிரண்டுதான் போனாள்.

உடம்பு முழுவதும் எரிவது போலிருந்தது அவளுக்கு; அவனை அப்படியே தள்ளி விட வேண்டும் என எண்ணி முயற்சிக்கவும் செய்தாள்.

ஆனால் வலுவான ஆக்ரோஷமான அவனது பிடிக்குள் கோழிக்குஞ்சு போலத் தான் அவளது நிலைமை இருந்தது.

அவனோ தாமதிக்கவில்லை. வேகவேகமாய் செயல்பட்டு மலரிடம் தேன் குடித்த வண்டின் திருப்தியோடு விலகினான். கசக்கியெறியப்பட்ட மலர் போல் கிடந்தவளின் நெற்றியில் பெரிய மன்மத கொக்கு போல கடைசியில் முத்தமிட்டான்.



திகைத்து வெறித்துப் போனவளின் முகத்தை தன் பக்கம் திருப்பினான்.

''இப்போது.. என்னைப் பிடித்திருக்கிறதா? என் மீது வெறுப்பு வந்திருக்குமே?''

அவன் அப்படிக் கேட்டபோது அவளுக்கு எல்லாம் புரிந்தது. அவளை வெறுப்பேற்றி, நோகடிக்க வேண்டும் என்பதற்காகவே இப்படியொரு செய்கையை செய்திருக்கிறான்.

புனிதமாய் மெல்ல மெல்ல தெரிந்து கொள்ள வேண்டிய தாம்பத்யத்தை இப்படி ரவுடி போல்... பெண்ணிடம் வலுக்கட்டாயமாய் நடந்து கொள்ளும் தெருப் பொறுக்கி போல் இவன் நடந்திருக்கிறானே.. என்ன மனிதன் இவன்?

நந்தினி யோசித்தபோது இன்னொரு விஷயமும் அவளுக்கு உரைத்தது. அவளைப் பற்றியோ அவளது உணர்வுகளைப் பற்றியோ அவனுக்கு கொஞ்சமும் கவலையோ அக்கறையோ இல்லையே..! அவளை அண்ணன் கிரிதருக்காக பழி வாங்க வேண்டும். இம்சிக்க வேண்டும். அப்படி அவள் வேதனைப்படுவதை குரூரமாய் அவன் ரசிப்பான். அதில் அவனுக்கு திருப்தி!

அதையும் ஒரு நாள் வாய்விட்டே கேட்டாள். அதற்கும் அவன் வெட்கமில்லாமல் பதில் சொன்னான். ''இப்படிச் செய்தால் சொர்க்கத்தில் இருக்கும் அவனது அண்ணனின் ஆத்மா நன்கு சாந்தமடையுமாம்..!''

அவன் சொல்வது போலவே செயலில் காட்டுவதிலும் குறியாயிருந்தான். அதற்குப் பின் வந்த நான்கு நாட்களும் அப்படியே சென்றன. இரவுகளில் வழக்கமான அவனது மூர்க்கத்தனமான அனுபவமே அவளுக்கு ஏற்பட்டது.

ஏதோ வேட்டையாட வந்த வேட்டைக்காரன் போல் தான் சுற்றி வந்து அவள் உடம்பைப் பார்ப்பான். அவன் கண்களில் பளபளப்பு எகிறும். இரை தேடும் மிருகமாய் அவளை நெருங்குவான். அவளுக்குப் பிடிக்கிறதோ இல்லையோ என்பது பற்றியெல்லாம் கவலைப்படாமல் இரையை உண்ணும் மிருகம் போல் வெறியோடு நடந்து கொள்வான்.

முதலில் நந்தினிக்கு இது பெரும் அவமானமாய் ஆத்திரமாய் இருந்தாலும் போகப் போக பழகிக் கொண்டாள். அது போன்ற சமயங்களிலும் உணர்ச்சியற்ற மரக்கட்டை போல் நினைத்துக் கொண்டு கண்களையும் மூடிக் கொள்வாள்.

அவளுக்கு மகேந்திரன் விஷயத்தில் ஒன்றுதான் புரியாமல் பெரிய ஆச்சரியத்தை ஏற்படுத்தியிருந்தது. அவன் ஒரு நாளாவது தன்னைப் பற்றி நினைப்பானா தனக்கும் மனம் என்ற ஒன்று உண்டு என புரிந்து கொள்ள மாட்டானா? என ஏங்கினாள்.

ஒரு நாள் அப்படி அவன் மூர்க்கமாய் நடந்து கொள்வதற்கு விளக்கம் வேறு கொடுத்தான். ''நான் மட்டும் அப்படி மென்மையாக நடந்து கொண்டால் உனக்கு மனைவி போன்ற நினைப்பு வந்துவிடும். உன்னை நான் மனைவியாக்கியிருப்பது... பழி வாங்கத்தானே? அதை நீ ஒவ்வொரு நிமிடமும் ஒவ்வொரு நொடியும் புரிந்து கொள்ள வேண்டும். அதற்காகத்தான் இப்படி நடந்து கொள்கிறேன். இப்போது புரிகிறதா?''

அவனது விளக்கத்தைக் கேட்ட அவளுக்கு நெருப்புத் துண்டுகளை தலையில் கொட்டியது போல் தான் இருந்தது.



இவன் பழி வாங்கப் போகிறேன் என்கிறானே? எத்தனை நாளைக்கு? எத்தனை வருடங்களுக்கு? வாழ்க்கை முழுவதுமா? வாழ்க்கை முழுதும் அவன் சொல் கேட்டு அவனுக்கு அடிமை போல் இருப்பாளா? முதல் முறையாய் நடுக்கத்துடன் யோசித்தாள் அவள்.



# 15

அதற்குப் பின் வந்த வாரங்கள் நந்தினியை மிகவும் சோதிப்பதாகவே இருந்தன. அவளை ரொம்பவும் தான் இம்சித்தான் மகேந்திரன்.

திடீரென்று அலுவலகம் முடிந்து மாலை வந்து, 'கிளம்பு' என்பான். எங்கு என்று சொல்ல மாட்டான். அவள் அரக்கப் பரக்க கிளம்பியதும் காரிலேறி விருட்டென தியேட்டர் ஒன்றுக்குப் போய் நிறுத்துவான்.

அவளும் சினிமாவுக்குத்தான் இவ்வளவு அவசரப்பட்டானா? என படம் பார்க்க ஆரம்பிப்பாள். படம் ஆரம்பித்து அவள் லயித்துப் பார்க்க ஆரம்பித்ததும், அதை குரூரமாய் கவனித்து, எழுந்து விடுவான்.

அவளையும் எழுப்பி விடுவான். 'படம் பார்த்தது போதும் வீட்டிற்குப் போவோம்..' என்று சாதாரணமாய் அவன் சொல்லியபோது அதன் உள்ளர்த்தம் அவளுக்குப் புரிந்தது.

எங்கே.. அவள் சந்தோஷப்பட்டு விடுவாளோ.. என்கிற பயம். அவனைப் பொறுத்த வரையில் எப்போதும்

அவளை எரிச்சல் ஆக்க வேண்டும். அவள் எரிச்சல் தான் பட வேண்டும்.

இது போதாதென்று சில சமயம், அவள் நளினமாய் சேலை கட்டிக் கொண்டு வருவதை பார்த்தவன் ஷாப்பிங் சென்று ஜீன்ஸ், டீ ஷர்ட் போன்ற துணிமணிகளை வாங்கி வந்தான்.

''இனி.. நீ சேலை கட்டக் கூடாது. இதுதான்.. உனது டிரஸ்...'' என்றபோது அவள் மறுப்பேதும் சொல்லாமல் தலையசைத்தாள்.

சில சமயம் அவளை எரிச்சல் படுத்த வேண்டும் என பின்புறமாய் போய் அவளை இறுகக் கட்டியணைப்பான். எதிர்பாராத நேரத்தில் முத்தமிடுவான். இடுப்பை வளைத்தும் பிடித்து மடியில் உட்கார வைப்பான். தோளோடு இறுக கரங்களை அழுத்திக் கொண்டு, ''எங்கே என் முகத்தை, கண்களைப் பார்...'' என்பான்.

அவன் அப்படிச் செய்கையில் அவள் திணறுவாள். அந்த திணறலை அவன் ரசிக்க வேண்டும் என்பது அவனது எண்ணம். ஆனால் அவள் நந்தினி எந்தவித முகச்சுழிப்பும் காட்டவில்லை.

சொல்லப் போனால் முகத்தில் எவ்வித உணர்ச்சியையும் பிரதிபலிக்காதவளாய்த் தான் நடந்து கொண்டாள்.

நந்தினி தனக்குத்தானே எடுத்த முடிவு இது. எதற்கும் எதிர்த்தால் எதிர்ப்புக் காட்டினால்தானே அவனுக்கு ஆவேசம் ஆக்ரோஷம் வரும்?

எதையும் எதிர்க்காமல்.. அப்படியே வாங்கிக் கொண்டால்..? அவன் விரும்புகிறபடி எல்லாம் வளைந்து கொண்டால்..?



தன்னையறியாமல் அப்படியொரு முடிவெடுத்து செயல்படுத்தவும் ஆரம்பித்து விட்டாள் அவள்.

அவளது இந்த திடீர் மாற்றம் அவனுக்குப் பிடிபட வில்லை. இவளுக்கு என்னவாயிற்று? எதைச் செய்தாலும் சீறாமல் எதிர்ப்பு காட்டாமல் இருக்கிறாள்.. என்னதான் இவளுக்கு ஆயிற்று..? என நினைத்தான்.

அது புரியாமல் போகவே தன்னிடம் உள்ள வேகம் குறைந்து விட்டதா.. அதனால் இவளுக்கு அசூயை ஏற்படவில்லையோ.. என நினைத்து வேகத்தைக் கூட்டினான். இரவுகளில் மேலும் மூர்க்கமாய் நடந்து அவள் முகக் குறிப்பைத் தேடினான்.

ஆனால் அதிலும் ஏமாந்து தான் போனான். அவளின் எவ்வித சலனமுமில்லாத பார்வை அவனுக்கு எரிச்சலையே ஏற்படுத்தியது.

அந்த எரிச்சல் தாங்க முடியாதவனாய் ஒரு நாள் கேட்டும் விட்டான்.

''ஏன்.. இப்போதெல்லாம் உனக்குக் கோபம் வரவில்லை? ஒருவேளை என்னைக் கட்டிக் கொண்டதில் சூடு, சொரணை எல்லாம் அற்றுப் போய் விட்டதோ?''

அவன் கேள்விக்கு அவள் பதில் சொல்லாமல் சிரித்தாள்.

''ஏன் சிரிக்கிறாய்? பதில் சொல்..!'' என்றான்.

அவள் சிரிப்பை நிறுத்தாமல், ''அப்படியில்லை. வேறு ஒரு காரணம்...'' என்றாள்.

அவன் புரியாமல் பார்த்தான்.

''வேறு காரணமா?''

''ஆமாம்.. கொஞ்சம் யோசித்துப் பாருங்கள். நீங்கள் யார்? என் கணவர். நான் உங்களது தாலி கட்டிய மனைவி. நீங்கள் எப்படி நடந்து கொண்டாலும்.. பொறுத்து உங்கள் மனம்படி நடப்பது எனது கடமை. நமது பண்பாடு, மேலும்...''

''சொல்லு...''

''எல்லாவற்றுக்கும் மேலாக நான் உங்களை மனதார விரும்புகிறேன். நேசிக்கிறேன். நீங்கள் கோபப்படுவது.. அப்படி நடந்து கொள்வது எனக்குத் தவறாகத் தெரிய வில்லை. நியாயமாகத்தான் படுகிறது...''

அவள் சிரித்தபடி சொன்னது அவனுக்கு தாங்க முடியாத எரிச்சலைத் தந்தது. கோபங் கொண்டவனாய் முன்னால் இருந்த ப்ளவர் வாஷை தூக்கிப் போட்டு உடைத்தான்.

இவளை எப்படித்தான் பழி வாங்குவது?

மறுபடியும் அவனது முகம் தீவிர சிந்தனைக்குப் போக அவள் அவனையே அதிசயமாய் பார்த்துக் கொண்டிருந் தாள்.

மேலும் அந்த நிகழ்ச்சியில் இருந்து நந்தினி முற்றிலும் மாறி விட்டாள்.

ஏதோ அவனுக்காகத்தான் பிறந்தது போல தன்னை நினைத்துக் கொண்டாள். முகத்தை எதற்கு 'உம்'மென்று வைக்க வேண்டும்..? என நினைத்தவள் ஒரு நாள் அதையும் இன்முகமாய் மாற்றி புன்னகைக்க ஆரம்பித் தாள்.



அவன் எது சொன்னாலும்... கோபப் பட்டாலும், மூர்க்க மாய் நடந்து கொண்டாலும் அவளது வழி சாந்தம்தான் புன்னகைதான்!

அந்த இனிய புன்னகை மாறாமலே அவள் நடமாடி னாள். அவனுக்கான பணிவிடைகளை இழுத்துப் போட் டுக் கொண்டு செய்ய ஆரம்பித்தாள். உணவுப் பதார்த் தங்களிலும் காலை டிபனில் அவனுக்குப் பிடித்த வெண் பொங்கலில் ஆரம்பித்து மதியம், இரவு என அவனுக்குப் பிடித்தமான டிஷ் வகைகளை செய்து அசத்தினாள்.

அவளது இந்த விழுந்து விழுந்து கவனித்து அன்பைப் பொழியும் செய்கை அவனை ரொம்பவும் இம்சித்தது.

பொறுத்துப் பொறுத்து பார்த்தவன் கடைசியில் அந்த பயங்கர அஸ்திரத்தையும் அவளை நோக்கி பிரயோகித் தான்.

''உன்னிடமிருந்து விலக விரும்புகிறேன். விவாகரத்து வேண்டும்...'' என்றான் அமைதியாக.

* * *

அவன் திடும்மென்றுதான் ஒரு நாள் சொன்னான். அவன் சொன்னதைக் கேட்டு அவள் அதிர்ச்சியின் உச் சிக்கே சென்று விட்டாள். எழுந்த பயத்தில் உடம்பே நடுங்கியது.

அஸ்திவாரத்தையே அசைக்க முடிவு செய்து விட்டான். என்ன செய்வது?

காதுகளை நம்ப முடியாதவளாய் மறுபடியும் கேட்க அவன் அழுத்தந்திருத்தமாய் சொன்னான்.

''புரியவில்லை..? விவாகரத்து..! டைவோர்ஸ் வேண்டும். நீ சம்மதித்து தந்தால்.. லேசாக போய்விடும். இல்லையெனில் கோர்ட்டில்தான் உன்னிடம் மோத வேண்டியிருக்கும். என்ன சொல்கிறாய்?''

அவள் ஒரு கணம்தான் யோசித்தாள்.

சட்டென பதில் சொன்னாள்.

''சம்மதிக்கிறேன். உங்களுக்கு அது சந்தோஷத்தை ஏற்படுத்தும் என்றால் கண்டிப்பாக மனப்பூர்வமாகச் சம்மதிக்கிறேன்...''

அவன் கொடுத்த அதிர்ச்சியை விட அவள் சொன்ன பதில் அவனுக்குப் பெரும் அதிர்வையே ஏற்படுத்தியது.

''நிஜம்.. நிஜம்மாகவா சொல்கிறாய்..? எப்படி.. எப்படி.. உன்னால் இப்படி.. இப்படி.. சொல்ல முடிந்தது?''

அவள் கத்துவாள், குதிப்பாள் ஆர்ப்பாட்டம் செய்வாள் என எதிர்பார்த்தவன் அது நடக்காதது கண்டு, நம்ப முடியாத ஆச்சரியத்துடன் திக்கித் திணறி அவளிடமே கேட்டான்.

அதற்கும் அவளிடமிருந்து திடமான உறுதியான பதில் வந்தது.

''நான் உங்களை அவ்வளவு நேசிக்கிறேன். அளவு கடந்து விரும்புகிறேன். உங்கள் விருப்பம்தான் எனக்கு முக்கியம். அது போதும் எனக்கு...''

சர்வ சாதாரணமாய் அவள் சொல்ல அவனால் முழுதும் நம்ப முடியவில்லை.



சும்மா பேச்சுக்கு சொல்கிறாளோ என சந்தேகப்பட்டவன் மறுநாள் சோதிப்பதற்காகவே வக்கீலிடம் வாங்கிய டைவோர்ஸ் பேப்பர்களை அவளிடம் நீட்டினான்.

''இதில் கையெழுத்துப் போடு...''

அவள் பதில் பேசாமல் பேப்பர்களை வாங்கிப் பார்வையை ஒட்டி நிதானமாய் கையெழுத்துப் போட்டாள்.

அதைப் பார்த்த.. அவன் முகம் மாறியது.

மூளையில் எதுவோ வெடித்தது போல் தலையைப் பிடித்துக் கொண்டான்.

அவனது கோபமான கண்களில் நீர் திரையிட்டு படபடவென வழிந்தது.

பட்டென நெற்றியில் அறைந்தபடி அவள் பக்கம் வந்து நடுங்கியபடி அவள் கரங்களைப் பற்றினான்.

''நான் தப்பு செய்து விட்டேன். என்னை மன்னித்து விடு நந்தினி..'' என்றபோது அவன் உடம்பே குலுங்கியது.

அவனின் மாறுதலை திடீர் மாற்றத்தைக் கண்டு நந்தினியும் அதிசயித்துத்தான் விட்டாள்.

எப்படி முரட்டுச் சிங்கமாய் கர்ஜித்து கிடந்தவன் இப்படி உடைந்து போய் உடம்பே குலுங்குமளவுக்கு.. எப்படி.. எப்படி மாறினான்? எதனால் இந்த மாற்றம் நிகழ்ந்தது?

அவள் நம்ப முடியாமல் அதிசயிக்க, ''என் மீது இவ்வளவு அன்பு வைத்திருக்கிறாயா நந்தினி? உன்னை துன்புறுத்திய நான் பாவி. பெரும் பாவி!'' அரற்றவே ஆரம்பித்து விட்டான் மகேந்திரன்.

# 16

“என்னை மன்னித்து விடு. நான் தவறு செய்து விட்டேன்...” என அவள் கைகளைப் பிடித்துக் கொண்டவனை நந்தினி ஒருவித பதற்றத்துடனே பார்த்தாள்.

நிஜம் உண்மை சுடுகிறது என்று சொல்வார்களே.. அது போல் அவனது நிஜமான குற்ற உணர்ச்சி விழித்து அவனைச் சுட்டு விட்டதோ!

நடப்பதெல்லாம் உண்மைதானே..? கனவில்லையே?

நம்ப முடியாமல் மை விழிகளை அகல விரித்துப் பார்த்தபோது கலங்கிய அவன் கண்கள் சிதறிய நீர்த் துளிகள் நடப்பது நிஜம் என உரைத்தது.

ஆக.. மகேந்திரன் மனம் மாறி விட்டான். அவளது அன்பான நடவடிக்கைகளினால் உண்மையானவன் ஆகிவிட்டான்.

அவன் செய்த துன்பங்களை பொறுமையாய் அவள் சகித்துக் கொண்டதற்கு சரியான பலன் கிடைத்து விட்டது.

கோபம், மூர்க்கம் அகன்ற அவனது கனிவான முகத்தை ஒரு கணம் பார்த்து வியந்தவள், “நீங்கள் திருந்தி விட்டீர்கள். இனி எதற்கும் கலங்கக் கூடாது...” என்பது போல் நெஞ்சோடு அவனை இறுக அணைத்துக் கொண்டாள்.

அவனும் ஆசையாய் அவள் அணைத்த அணைப்பில் கோழிக் குஞ்சாய் இறுக ஒட்டிக் கொண்டான்.



முன்பு எத்தனை முறை அவளை அவனும் கட்டித் தழுவியிருக்கிறானே... இறுக்கமாய்.. பிடித்திருக்கிறானே.. ஒரு முறையாவது இந்த அமைதியான அன்பான சுகம் கிடைத்ததா? நாம் மூர்க்கமாய் அணைத்ததிற்கும் அவள் வாஞ்சையோடு அள்ளி அணைப்பதற்கும்தான் எவ்வளவு வித்தியாசம்?

மருகியவனாய் அவளை நிமிர்ந்து பார்க்க முடியாமல் குனிந்தான்.

இருவரும் ஓரிரு நிமிடங்கள் அப்படியே அந்த இறுக்கமான நினைப்பிலே மெய் மறந்து கண்களை மூடினர்.

அவ்வளவு நாள் பட்ட வேதனை வலிகளை அவ்வளவு எளிதில் ஆசுவாசப்படுத்தி நிம்மதி கொள்ள முடியாது தான். ஆனாலும், எல்லாம் முடிந்து.. ‘இனியெல்லாம் சுகமே...’ என்ற சந்தோஷமான மனநிலை மெல்ல உதிர்ந்து அவளை மகிழ்ச்சியில் மெய்மறக்கச் செய்தது.

அவன் மனதிலும் அப்படித்தான்? இவ்வளவு நாளும் கொண்டிருந்த இறுக்கமான முரட்டு மனநிலை சட்டென பூஜ்யமாகி, நிஜமான உலகத்திற்கு வந்தது போல் ஆனது. தன் மீது பரிவு காட்ட அன்பு செலுத்த உயிராய் ஒருத்தி இருக்கிறாள் என்கிற விஷயமே பெரும் ஆச்சர்யமாய் அவனை நிலை கொள்ள வைத்தது.

அவளது அளவு கடந்த நேசத்தை, அன்பு கனிய உருகும் குணத்தை நினைத்து விம்மியவன் அவளை துன்புறுத்தியது நினைத்து வேதனையடைந்தான்.

மெல்ல முகம் நிமிர்த்தி பார்த்தவன், “நான் ஒரு மடையன் நந்தினி. என் அண்ணன் அவசரப்பட்டு

கோழை போல் ஓர் முடிவெடுத்து தற்கொலை செய்து கொண்டால் அதற்கு நீயும் உன் குடும்பமும் என்ன செய்ய முடியும்? என் அண்ணனைப் போலவே நானும் அவசரக் காரனாய் செயல் பட்டிருக்கிறேனே...?''

பழையதை நினைத்து அவன் வருந்தி சொல்வதைக் கண்டு மனம் மகிழ்ந்தவள், ''சரி அதையெல்லாம் விடுங் கள்,'' என்றாள்.

ஆனாலும் அவன் விடாது அரற்றினான். ''அதைவிட கொடூரமாய் மூர்க்கமாய் காட்டுமிராண்டி போல் நடந்திருக் கிறேனே நந்தினி? அதெல்லாம் நினைத்துப் பார்த்தால் எனக்கே அவமானமாய் இருக்கிறது. நானா அப்படி ஈவு இரக்கமில்லாமல் நடந்து கொண்டிருக்கிறேன்? அப்படி உன்னை நான் துன்புறுத்தியது எல்லாம் மன்னிக்கக் கூடிய விஷயமா? இருந்தும்.. இருந்தும் உன்னிடம் மனதார மன்னிப்பை விரும்புகிறேன். மன்னிப்பாயா நந்தினி?''

அவன் தொடர்ந்து மனம் உருக பேச அதற்கு மேலும் பொறுக்க முடியாதவளாய் தன் மென்மையான விரல்களை அவன் வாயில் வைத்து மறுப்பாய் நிறுத்தினாள்.

''போதும்.. எத்தனை முறை இதையே சொல்வீர்கள். நடந்ததையெல்லாம் மறந்து விடுங்கள். நடக்கும் நல்ல விஷயங்களை மட்டும் பாருங்கள். உங்கள் அன்பு இப்படி முழுமையாக கிடைக்க வேண்டும் என்று தான் இவ்வளவு நாட்கள் ஏங்கினேன். அது இப்போது, கிடைத்து விட்டது. அது போதும் எனக்கு...''

அவள் நிறுத்த அவன் அவள் முகம் நிமிர்த்தி தொடர்ந் தான். ''உனக்கு ஒரு விஷயம் தெரியுமா நந்தினி, ஆரம்



பத்தில் உன்னைப் பார்த்தது முதலே உன்னுடைய அறிவும், அழகும் எனக்கு ரொம்பவும் பிடித்துப் போயிற்று. உன்னைப் போய் எப்படி பழி வாங்க முடியும் என தவிக்கத் தான் செய்தேன். கடைசியிலும் மனதை கல்லாக்கிக் கொண்டுதான் அவ்வளவு கொடுமைகளையும் செய் தேன். என்னை மன்னித்து விடு நந்தினி...''

சொன்னவனை காது மடல்கள் அதிர பார்த்தவள், ''மன்னிப்பு இருக்கட்டும் - இன்னொரு விஷயம் என்னை உறுத்துகிறதே'' என்றாள்.

''என்ன விஷயம் கண்மணி?'' என்றான் அவன் பரிவான அக்கறையுடன்.

''திடீரென சிகரெட், மது என பழக்கங்களுக்கு நீங்கள் மாறியது.. கெட்டுப் போனது.''

வார்த்தைகளை அவள் அப்படியே நிறுத்த உரிமை யுடன் அவள் சின்ன இடையை கரங்களால் அணைத்து வளைத்துச் சிரித்தவன், ''ஓ... அது நிஜமில்லை. வெறும் நடிப்பு நந்தினி! உன்னை பயங்காட்டி வெறுப்பேற்ற நான் செய்த ஒரு நாள் நடிப்பு. அன்று நான் குடித்ததும் மது இல்லை. பெப்ஸி கோலாதான்!''

அவன் விளக்கமளிக்க பெரும் பாரம் நீங்கியவள் போல், ''அப்பாடா, இப்போதுதான் எனக்கு நிம்மதியாய், சந்தோஷமாய் இருக்கிறது! எங்கே.. என் மேல் உள்ள கோபத்தில் எதும் கெட்ட பழக்கங்களுக்கு அடிமையாகி விடுவீர்களோ என்று பயந்தேன்...''

அவள் சொல்லி முடித்ததும்தான் தாமதம் அவள் கரங்களை பிஞ்சு விரல்களை அப்படியே கோர்த்து தன்

நெஞ்சில் கொண்டு போய் வைத்தவன், ''நான் இனி அடிமை தான் கண்மணி. யாருக்குத் தெரியுமா? என் இனிய நந்தினிக்கு, இந்த நந்து செல்லத்திற்கு..! இனி நீ தான் என் உலகம். உன் காலடிதான் என் சரணம்!'' என்றபடி அவளை தன் மடியில் போட்டு கொஞ்ச ஆரம் பித்தான் அவன்.

அவளும் சந்தோஷ பூரிப்படைந்தவளாய் அவன் மார்பில் விழுந்தாள். மென்மையான அந்த அணைப்பில், அவனது நிஜமான அன்புப் பிடியில் வெட்கம் படர, தன்னை மறந்து கனவுலகில் சஞ்சரிக்க ஆரம்பித்தாள் நந்தினி.

Library Library Library Library Library Library